4

# வித்யாதனம்

தொகுதி V பிப்ரவரி & மார்ச்மீ 1942ஆ பகுதி 11 & 12



OFFICE OF THE REGISTRAR ...
2 APR 1942
MADRAS

# பொருளடக்கம்


| | | பக்கம் | | | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 1. | பத்திராதிபர் கடிதம் | 1 | 10. | கெனில் வோர்த் VI பாகம் | 17 |
| 2. | சவுலின் செல்வழி | 2 | 11. | கடமையே சிற்றின்பத்திலும் முதன்மையானது | 20 |
| 3. | பழங்களின் விசேஷம் | 8 | 12. | தாராகணம் | 22 |
| 4. | மாடுகளை கவனிக்கும் விஷயம் | 9 | 13. | நசரேயனாகிய இயேசு | 23 |
| 5. | கீரை வகைகள். | 10 | 14. | கெனில் வோர்த VII பாகம் | 25 |
| 6. | பூர்வீக ராஜபுத்திரர் | 11 | 15. | விமானப் படையெடுப்பு முன் எச்சரிக்கை | 29 |
| 7. | சொப்பன பலன் | 12 | 16. | தீண்டாமை வேண்டாமே | 30 |
| 8. | தன்னல மறுத்தல் | 14 | 17. | கம்பர் கவித்திறம் | 31 |
| 9. | காவிதன் | 16 | | | |


——(o)——


**பத்திரிகையின் சந்தா விபரம்.**

REV. T. A. FENN,
London Mission Church,
Coimbatore.

பிரதி ஒன்றுக்கு ... அணா 1

வருஷ சந்தா ... ரூ. 1—0—0

உப பத்திராதிபர் Jane Fenn.



# விளம்பரம்

"வித்யாதனம்" உங்களுக்கு அனுப்பப்படும்போது மேல் விலாசத்தில் எந்த வருஷம் எந்த மாதத்தோடு உங்கள் சந்தா முடிவடைகின்றதென்பதைக் குறிப்பிட்டிருக்கின்றோம். (உ-ம்) 2-41 என்றால் 1941ஹு 2ம் மாதம் என்பது பொருள். சந்தா முடிவடையுமுன் "வித்யாதனம்" அனுப்ப வேண்டாம் என்று பத்திராதிபருக்கு தெரியப்படுத்தா விட்டால் அடுத்த மாதப் பத்திரிகை வி.பி. தபால் (V.P.P.) மூலமாய் அனுப்பப்படும் என்று இதனால் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். ஏற்கனவே மணியார்டர் (M.O.) மூலமாய்ப் பணம் அனுப்பினால் தபால் செலவு குறையும். பத்திரிகை ஒன்றுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் அனுப்ப வேண்டும்.

T. A. FENN,
London Mission Church,
Coimbatore.

# வித்யாதனம்

# VIDYADHANAM

## TAMIL TREASURE CHEST

தொகுதி V பிப்ரவ்ரி & மார்ச்மீ 1942௵ பகுதி 11 & 12


## பத்திராதிபர் கடிதம்

பிரியமான பிள்ளைகளே !

கடந்த மாதம் பத்திரிகை அனுப்பத் தவறி விட்டதற்காக தயவு செய்து மன்னிக்கும்படி மன்றாடுகின்றோம். அதிக விசனப் படுகின்றோம். பல காரணங்களால் அனுப்பத் தடைப் பட்டபோதிலும் இரு மாதங்களுக்கும் சேர்த்து இம் மாதம் அனுப்புகின்றோம். படங்கள் குறைவு. விஷயம் அதிகம். ஆகையால் பக்கங்கள் இரு மடங்கிரா.

பத்திரிகை வராதபடியால் பலரிடமிருந்து எனக்குப் பல கடிதங்கள் வந்தன. அதிலிருந்து நேயர் இப் பத்திரிகையை எவ்வளவாய் நேசிக்கின்றனர் என்று அறியலானோம். இனித் தவறாமல் அனுப்பப் பிரயாசப் படுவோம்.

இப் பத்திரிகையைப் பற்றியக் குறைகள் இருந்தால் தயவு செய்து எமக்குத் தெரியப் படுத்துமாறு வேண்டுகின்றோம். நற் காரியங்களுண்டானால் அவைகளையும் எழுதுங்கள். பத்திராதிபருக்கு எழுதப்படும் நற் கடிதங்கள் இப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

இப் பத்திரிகையைப் பற்றியோ, விடுமுறை நாட்களைக் கழித்த முறையைப் பற்றியோ, பாடசாலைச் சம்பவங்களைப் பற்றியோ, ஊர்ச் செய்திகளைப் பற்றியோ எழுதியனுப்பும் நல்ல கடிதத்திற்கு வெகுமதி என்ன வென்றால், எழுதினவர்களுக்கு ஒரு வருஷத்திற்கு இப் பத்திரிகை இனமாக அனுப்பப்படும். இப் பரிசு பெறப் பிரயாசப் படுவோர் யார்? 15 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் மாத்திரம் இதில் பங்கு பெறலாம்.

உங்களனைவருக்கும் எம் அன்பு

இப்படிக்கு,

கோயமுத்தூர்,
20—2—1942

T. A. Fenn
பத்திராதிபர்

# சவுலின் செல்வழி

(E. C. Dolbeer)

(காட்சி:—எருசலேமி லுள்ள பிரதான ஆசாரியனின் அரண்மனை முற்றம்.)

அங்கங்கள்:—காமாலியேல் யூத ரூபி; நிக்கோதேமு யூதர் அதிகாரி; யோவேல் வேலை ஆள். சவுல் வைராக்கியப் பரிசேயன்.

(வேலைக்காரன் வாசலில் நிற்க, காமாலியே லும் நிக்கோதேமும் உட்பிரவேசிக்கின்றனர்.)

**காமாலியேல்:**—நண்பா, நிக்கோதேமு! நீர் பிரதான ஆசாரியன் அரண்மனைக்கு வந்திருக்கின்ற காரணம் யாது?

**நிக்கோதேமு:**—இந்த நசரேய கூட்டத்தாரை அநியாயமாக துன்புறுத்துவது எனக்கு நியாயமாகத் தோன்றவில்லை.

மேன்மை தங்கிய ஆசானே! உமது அபிப்பிராயமும் அவ்வாறே இருக்குமென்றறிவேன். கொடுமை; இது கொடுமை!

**காமாலியேல்:**—நான் அன்று சனதரீம் சபையில் கூறியபடி, "இக்காரியம் கடவுள் சித்தத்தின்படி நடந்தால், நாம் கடவுளுடன் போராடுகிறவர்களாயிருப்போம். இல்லையேல், இக் கூட்டம் தானே அழிந்து போகும்.

**நிக்கோ:**—நீங்கள் இவ்விடம் வரக்காரணம் என்ன? தாங்களும் இந்த வீண் இரத்தப் பழிக்கு விரோதமாகப் பேச வந்தீர்களோ?

**காமாலியேல்:**—ஆமாம், தரிசு பட்டணத்து சவுல் இங்கு இருக்கின்றான். அவன் நமது பழைய மாணவன். அவன்தான் இக்காரியத்தில் உற்சாகமாய் கட்சி கட்டி நின்று, நசரேயக் கூட்டத்தாரைச் சபைக்கு இழுத்து துன்புறுத்திக் கொலை செய்கின்றான். அவன் மார்க்க வைராக்கிய முள்ளவன். இவ்வளவு தூரம் கொரேமாயிருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. அவனிடம் பேசலாமென்று வந்திருக்கின்றேன்.

**நிக்கோ:**—அவன் இங்குதான் இருக்கின்றானா?

**காமாலி:**—அப்படித் தான் கேள்விப் பட்டேன். ஏதோ முக்கிய சமாச்சாரத்தைப் பற்றிக் காய்பாவுடன் பேசப் போகின்றானாம்.

**நிக்கோ:**—அதோ! அரண்மனையிலிருந்து அவன் தான் வருகின்றான்.

(சவுல் உட் பிரவேசிக்கின்றான்)

**காமாலி:**—ஆம் சவுல்தான். சவுலே, என் மகனே, உன்னைக் கடவுள் ஆசீர்வதிப்பாராக! யூதர் தலைவர் நிக்கோ உனக்கு தெரியுமல்லவா?

**சவுல்:**—கனம் பொருந்தியவரே என் குருவே, என் வந்தன மளிக்கின்றேன்.

**நிக்கோ:**—சவுலே! வாழ்க! இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக! என் மகனே! உன்னையும் உன் வைராக்கியத்தையும் பற்றிக் கேள்விப்பட்டேன். நம் தூய மார்க்கத்தைக் காக்கும் வாலிபனே! நசரேயனாகிய இயேசுவின் கூட்டத்தாருக்கு விரோதமாக, நீ அதிக முயற்சி எடுப்பதாக அறிந்தேன்.

**சவுல்:**—இந்தக் கள்ளப் போதகர்களை யகற்றுவதில் கடவுள் சித்தத்தின் படியே போராடுகிறேன்.

காமாலியேல் :—என் அன்புக் குரிய மாண வ்னே, உன்னோடு சிறிது நேரம் சம்பாஷிக்க யான் ஆசிக்கின்றேன். நீ எருசலேமுக்கு வந் தது முதல் நசரேயர் காரியத்திலேயே ஈடு பட்டிருப்பதால், உன்னைப் பார்க்க முடிய வில்லை. இவ் விஷயத்தைக் குறித்தே யானும் பேச வேண்டும். நீ கடவுளுடன் போர் புரி வது போல காணப்படுவது நல்ல தல்ல.

சவுல் :—என் குருவே, அப்படி யல்ல. நியாயப் பிரமாணங்களையும், பாரம் பரியங் களையும், தீர்க்கதரிசனங்களையும், உமது பாதத்தில் கற்றேன். என் சுத்த மனசாட்சி யின்படியே கர்த்தரைச் சேவிக்கின்றேன். இயேசு என்னும் அந்த அத்தனின் கூட்டத் தாரை எருசலேமினின்று அகற்றி விட் டேன். நான் பிரதான ஆசாரியனின் அதி காரத்தைப் பெற்று, தமஸ்கு வரை சென்று அவர்களைத் தொலைக்கவே வந்திருக்கின் றேன். இங்கிருந்து ஓடின அந்த துரோகிகள் அவ்விடத்திலுள்ள ஜெப ஆலயங்களில் மிகுந்த சங்கடம் உண்டாக்குகின்றனர்.

நிக்கோ:—தமஸ்கு பட்டணத்திற்கா செல் லுகின்றாய் ?

சவுல்:—ஆம், தலைவரே! நாளைக்கு சூரிய உதயத்தில் புறப்பட உத்தேசம். சமாரியா வழியாய் துரிதமாய்ச் சென்று, ஜெப ஆல யத் தலைவர்களிடம் இந்தப் புது நிருபங் களைக் கொடுக்கவும், கப்பர் நாகூமில் யவீரு வீடு சென்று, இந்தக் கூட்டத்தாரைப் பற்றி எச்சரிக்கவும், என் பிரயா ணத்தில் அவர் எனக்கு உதவி செய்ய வேண்டுமெனக் கேட்கவும் போகின்றேன்

காமாலி :—தேவப் பணி செய்யும் உத்த மனே! என்னுடன் வந்து தங்கி இளைப்பாறிப் போகுமாறு விரும்புகின்றேன். பழைய காரி யங்களைப் பற்றி பேசிக்கொள்வோம்.

சவுல்:—ஆ, என்ன சிலாக்கியம் பெற்றவன் யான். அவ்வாறே தங்க ஆசிக்கின்றேன். கனம் நிக்கோதேமு அவர்களே! யான் வரு கின்றேன். மன்னிக்கவும்.

நிக்கோ :—சமாதானம் உண்டாவதாக! ஆண்டவர் ஆசீர் அளிப்பாராக!! கர்த்தர் உனது ஆவியோடு இருப்பாராக!!!

காமாலி:—நிக்கோதேமு உமக்குச் சமாதா னம் உண்டாவதாக!

சவுல்:—உமக்கும் சமாதானம் உண்டாவ தாக !

(காமாலியேலும் சவுலும் போகின்றனர்)

நிக்கோ:—(தனக்குள்) ஆகா! இந்தப் பிரதான ஆசாரியர், இயேசுவின் கூட்டத்தாரை வாரி னால் அடித்தும், சிறை யிட்டும், கொலை செய் தும இன்னும் திருப்தி யடையவில்லையே. தூர இடம சென்று அவர்களைத் துன்பப் படுத்த வும் இம்சிக்கவும் கச்சை கட்டுகின்றார்களே. என் செய்வது? நானும் அந்த இயேசுவின் சீஷன் என்பதை அறியாதார் போலும். யூத ரின் அதிகாரியான என் மேலும் கை போடத் துணிவு கொள்ளலாம். ஆனால் எனக்கு அவ் வளவு பயமில்லை. நான் இயேசுவாகிய என் நாதரிடம் இரவிலேதானே சென்றேன். ஆனா லும் யாருக்குத் தெரியும்? கர்த்தர் இந்த வேளைக்காகவே என்னை ஆயத்தம் செய்திருப் பார். இரகசியத்தில் நான் இயேசுவுக்கு ஊழி யம் செய்யவும் சவுல் கொலை செய்ய விரும்பு வோரை இரட்சிக்கவும் முடியும். நான் என்ன செய்யலாம்? அவர்களை எப்படி எச்சரிக்கலாம்? யோவேல், நீ அந்த இயேசுவின் அடியான் அல்லவா ?

யோவேல் :—ஆம் எஜமானே. யார்தான் அந்த மகாத்துமாவை நேசிக்கவும் ஊழியஞ் செய்யவும் மாட்டேன் என்பார்? அவர் எனக்குத் தமது ஆவியைக் கொடுத்து உயிர்ப்பிக்கவில்லையா? விதவையாகிய என் தாயாருக்கு நாயீன் ஊரில் நான் ஒரே மகனல்லவா? எனக்காகவே அவர் மாண்டார். என் உயிரை அவருக்காக அர்ப்பணம் செய்ய காத்திருக்கின்றேன்.

நிக்கோ :— நீ அவருக்குச் சேவை செய்யத் தக்க சமயம் இதுவே. உன்னை தமஸ்குப் பட்டணம் அனுப்புகின்றேன். நீ போய் சீஷரை சவுலின் கைக்குத் தப்ப எச்சரிக்கை செய்துவிடு. அவன் அவர்களை பிடித்துக் கட்டி எருசலேமுக்கு கொண்டுவரவே அங்கு செல்கின்றான்.

யோவேல் :—பூமியின் கடையாந்திரங்களுக்கும் செல்ல யான் தயாராக இருக்கின்றேன். என் இயேசுவுக்காக எல்லாம் செய்வேன்.

நிக்கோ :—அரிமத்தியா ஊர் யோசேப்பின் வீட்டிற்குச் சென்று, இச்செய்திகளை அறிவித்து, நான் உன்னை அவரிடம் அனுப்பியதாகச் சொல்லு. உன் பிரயாணத்துக்கு வேண்டிய வசதிகளை அவர் செய்யக்கூடும். அவரிடம் கோவேறுக் கழுதைகளுண்டு. பகைவனுக்கு நாம் பட்சம் காட்ட வேண்டும். சவுலின் வைராக்கியமும், மனோதிடமும் நமது இயேசுவுக்காகச் சேவை செய்வதில் உபயோகிக்கப் படுமாகில் என்ன அனுகூலமாகவிருக்கும். கப்பர்நகூம் ஜெப ஆலயத் தலைவன் யவீரு வீட்டிற்கும் சொல்லு. நசரேயர் கூட்டத்தாரை காப்பாற்ற வேண்டும். தாமதம் செய்யாதே.

யோவேல் :—நான் அப்படியே செய்கின்றேன். நமது கர்த்தர் எத்தனை அற்புதங்கள் செய்தவர். இந்தச் சவுலைத் தொடமாட்டாரா? அவருடைய சேவையில் சவுல் வேலை செய்யப் பிடிக்க மாட்டாரா? என் எஜமானே, கிறிஸ்துவுக்குள் என் சகோதரனே! போய் வருகின்றேன்.

நிக்கோ :—கர்த்தருக்குள் பிரியமான சகோதரனே! சீஷனாக அறியப்படாதநானும்உன்னை வாழ்த்தி வழிவிட்டனுப்புகின்றேன். பிதாவாகிய கடவுளின் கிருபை உன்னோடிருப்பதாக!

(யோவேல் போனபின்)

ஓ, இயேசுவே! என் பயத்தையும் தாமதத்தையும் எனக்கு மன்னியும். உண்மையில் யான் உம்முடையவன் என்பது உமக்குத் தெரியும். இயேசு ஐயனே, நடத்துமே!

## காட்சி 2

(சமாரியாவில் யாக்கோபின் கிணற்றோரம்)

(சூசன்னாள் சமாரியாவிலுள்ள ஒரு ஸ்திரீ. அவள் யோவேலுக்குத் தாகம் தீர்க்கத் தண்ணீர் வார்க்கின்றாள்)

யோவேல் .—(தண்ணீர் பருகினபின்) சூசன்னாள்! இன்னும் இயேசுவின் நாமத்தில் வருகின்றவர் போகின்றவர் அனைவருக்கும் தண்ணீர் கொடுத்து உதவுகின்றாயே! இது ஒரு பெரிய ஊழியம்!

சூசன்னாள் :—அன்று எனக்கு ஜீவ தண்ணீரீந்தவருக்கு இன்று இச்சிறிய சேவை செய்வது பெரிய காரியமா? யோவேல்! அவரைப் பின் செல்ல ஆயத்தமாயிருந்தேன் அவரோ என்னை இவ்விடத்திலேயே இருந்து அவர் நாமத்தில் வழிப்போக்கருக்குத் தாக சாந்தி செய்யும்படி சொன்னார். அவ் வழிப்போக்கருக்குச் செய்தது தமக்கே செய்ததிற்குச் சமானம் என்றனர். ஆகையால் உனக்கு வார்த்த தண்ணீர் தமக்கே வார்த்ததாகக் கொள்வர் அம்மகான். இங்கு வந்தது என்ன அவசர காரியம்?

யோவேல் :—இயேசு மன்னன் சேவையில் அவசரமாய்ப் போகின்றேன். கிறிஸ்தவர்

களுக்கு நேரிட்ட துன்பம் அவர்களைப் பல பாகங்களுக்குச் சிதறடித்தது. பிலிப்பு சமாரி யாவுக்கு வந்தனன். சிலர் தமஸ்குவுக்குச் சென்றனர். அங்குள்ள ஜெப ஆலயத் தலைவன் கிறிஸ்தவர்களின் பிரசங்கத்தையும் செய்கைகளையுங் குறித்துக் குறை கூறுகின்றனன். சவுல் என்பவன் அங்குபோய் அக் கிறிஸ்தவர்களைப் பிடித்துக் கட்டி எருசலேமுக்குக் கொண்டு வரும்படி அனுப்பப்பட்டிருக்கின்றனன். எனக்குப் பின்னால் வருகின்றான். நான் முந்திப் போக வேண்டும்.

சூசன்னாள் ;—அவன் இங்கு வந்தால் யாக்கோபின் கிணற்றுத் தண்ணீரில் அவனுக்குப் பங்குமில்லை பாகமுமில்லை என்பேன்.

யோவேல் ;—சூசன்னாள்! அப்படி சொல்லப்படாது. இயேசு அவ்வாறு சொல்லுவாரா? உன் சத்துரு தாகமாயிருந்தால் அவனுக்குத் தண்ணீர் கொடு என்றவர் சொல்லவில்லையா? சபையைத் துன்பப்படுத்துவதினால் கடவுளுக்குச் சேவை செய்வதாக எண்ணிக் கொண்டிருக்கின்றான். என் எஜமான் நிக்கோதேமுவும் அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும் சவுலைச் சந்திப்போரனைவரும் அவனை அன்பாய் வரவேற்று இயேசுவின் நாமத்தில் அவனுக்குச் சகல பணிவிடையும் செய்து அனுப்ப வேண்டுமென்று சொல்லுப்படி என்னை அவனுக்கு முன் அனுப்பியிருக்கின்றனர். அவன் கிறிஸ்து இயேசுவுக்குள்ளிருக்கும் கடவுளின் அன்பை அறியத்தக்கதாக இது வழியுண்டாக்கும் என்று நம்புகின்றோம். அவன் குணப்படுவதற்கு ஒரே வழி இயேசுவின் நாமத்தில் செய்யப்படும் அன்பின் சேவையே!

சூசன்னாள் :—யோவேல் எனக்கு மன்னிப்பாயாக! இயேசு இரட்சகா எனக்கு மன்னியும் உம் நிமித்தம் என் சத்துருக்களுக்குங் கூட ஒரு கலசம் தண்ணீர் கொடுப்பேன்.

யோவேல் :—இப்போது கிறிஸ்துவின் அடியாள் பேசுவது போலிருக்கின்றது. நான் போகவேண்டும். சவுல் வந்துவிடுவான். உனக்குச் சமாதான முண்டாவதாக! கர்த்தரால் மீட்கப்பட்ட சூசன்னாளே! கர்த்தருடைய ஆசீர்வாதம் உன்னோடும் உன் வீட்டாரோடும் இருப்பதாக.

சூசன்னாள் :—கர்த்தராகிய இயேசுவின் சக்தி உன்னைத் தொடர்ந்து பலப்படுத்துவதாக!

(யோவேல் போனபின சவுல் வருகின்றனன்)

சவுல் :—எனக்குத் தாகமாயிருக்கின்றது. களைப்புமிகுதி. (கிணற்றுக்குள் பார்த்து) யாக்கோபின் கிணறு வெகு ஆழம். தண்ணீர் எடுத்துக் குடிக்க என்னிடம் ஒன்றும் இல்லையே.

சூசன்னாள் :—ஐயா! யாக்கோபின் கிணற்றுத் தண்ணீரை நான் கொடுத்தால் குடிப்பீரா?

சவுல் :—நீ சமாரிய ஸ்திரீ. நானோ யூதன். நீ எப்படி எனக்கு தண்ணீர் கொடுப்பாய்? நான் எப்படி அதைக் குடிப்பேன்? சமாரியருடன் யூதருக்கு என்ன சம்பந்தம்?

சூசன்னாள் :—முன்னொரு நாள் ஓர் யூதன் இதே இடத்தில உட்கார்ந்து என் கையில் தண்ணீர் வாங்கிக் குடித்தனர். ஓர் யூதன் சமாரிய ஸ்திரீயினிடத்தில் தாகத்துக்குத் தானக்கேட்டதை எண்ணி யான் ஆச்சரியப்படுகையில் "என்னிடம் நீ கேட்டிருந்தால் ஜீவ தண்ணீரை உனக்குத் தருவேன். அதைப் பருகினால் ஒருக்காலும் தாகமுண்டாகாது" என்றும் சொன்னார்.

சவுல் :—அதற்கு அர்த்தம் என்ன? அப்படித் தண்ணீர் உலகில் உண்டோ?

சூசன்னாள் :—அவர் சொன்ன தண்ணீர் என்ன தண்ணீர்? கிணற்றுத் தண்ணீரன்று.

ஆத்துமாவுக்குப் பாவமன்னிப் பீந்து சுத்தி கரிக்கும் ஜீவ தண்ணீர்.

சவுல் :—உனக்கு அதைக் கொடுத்தாரா?

சூசன்னுள் :—கொடுத்தார். பாவியான நான் அதைப் பருகி மறுபிறப்படைந்தேன். சுத்தி கரிக்கப்பட்டேன். ஆன்ம சாந்தி பெற்றேன். என் குடும்பத்தாரும் பாவம் நீங்கிப் பரிசுத்தரா யினர். சமாதானமும் சந்தோஷமும் அங்கு தங்கின என் ஊராரும் அவரை ஏற்றுக் கொண்டு ஜீவ தண்ணீரைப் பருகி அன்பும் ஆனந்தமும் நிறைந்தவராயினர். கடவுளை இந்த மலையில் அல்ல ஆவியோடும் உண்மையோடும் எந்த இடத்திலும் ஆராதிக்கலாம் என்றும் அவர் போதித்தனர்.

சவுல் :—இரட்சிப்பு யூதர் மூலமாய் உண் டாகவேண்டுமே.

சூசன்னுள் :—அவரும் அவ்வாறே சொன் னார். கிறிஸ்து என்னும் மேசியா வரும்போது எங்களுக்குப் போதிப்பார் என்றேன்.

சவுல் :—அதற் கவர் சொன்னது என்ன?

சூசன்னுள் :—'உன்னிடம் பேசுகிற நானே அவர்' என்றனர்.

சவுல் :—(ஆச்சரியத்துடன்) தான் மேசியா என்று சொன்னாரா? அவர் பெயர் என்ன?

சூசன்னுள் :—அவர் நாமம் நாசரேத்தூரா னாகிய இயேசு.

சவுல் :—(கோபங்கொண்டு) அந்த இயேசு தேவதூஷணம் சொன்னவனுச்சே. மெய் மார்க்க சத்துரு வன்றோ. பிதாக்களின் மார்க்க விசுவாசத்தை புரட்டுகின்றவ னல்லவோ. புறக் கணிக்கப்பட்டவன். அவன் நாமத்தில் எனக் குத்தண்ணீர் வேண்டாம். நீயும் அவனைச் சேர்ந் தவள். அவனைச் சிலுவையி லறைந்து கொன் றோர்களே - உனக்குத் தெரியாதா? இப்போ தும் நான் அவனுடைய தொண்டரைப் பிடித்து இழுத்து எருசலேமுக்குக் கொண்டு போய் சங்க விசாரணை செய்து கொலை செய் யும் ஊழியத்தில் ஈடுபட்டிருக்கின்றேன். நீ சமாரிய ஸ்திரீ - உன்மேல் எனக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இருந்தால் உன்னையும் தண்டியாமல் விடேன்.

சூசன்னுள் :—அது எனக்குத் தெரியாதா? எனினும் அந்த இயேசுவின் நாமத்தில் தண் ணீர் தருவேன். உம் தாகம் தீர்ப்பேன், ஏனெனில் "உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்கு ஆகாரம் கொடு, தாகமாயிருந்தால் தண்ணீர் கொடு, அப்படி செய்வதினால் அக் கினித் தழலை அவன் தலையின்மேல் குவிப் பாய்" என்று அவர் எனக்குச் சொல்லி இங்கு வருகின்றவர்களுக்குத் தன் நாமத்தில் தாக சாந்தி செய்யும்படியாக என்னை இங்கு தங்கும் படி வேண்டிக்கொண்டார். இந்நாள் வரை அவர் சொற்படி தங்கி யூதனுக்கோ புறஜாதி யானுக்கோ; கிரேக்கனுக்கோ, ரோமனுக்கோ, மித்துருவுக்கோ, சத்துருவுக்கோ யாதொரு பேதமின்றி தண்ணீர் கொடுப்பது என் வேலையாயிற்று. அதில் எனக்கு சந்தோஷ முண்டு. "இச் சிறியரில் ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்." என்றனர். நீர் அவருக்குச் சத்துரு. எனினும் அவர் உம்மை நேசிக்கின்றார். அவர் நிமித்தம் இத் தண்ணீரை உமக்குத் தருகின்றேன். பானம்பண்ணிக் களைப்பாறும்.

சவுல் :—சமாரிய ஸ்திரீயிடமிருந்து அதி லும் நசரேயனை யண்டினவளிடமிருந்து ஒரு சொட்டுத் தண்ணீரேனும் பருகேன். அவன் ஓர் எத்தன். மாயக்காரரின் தலைவன்.

சூசன்னுள் :—அவர் நல்லவர், பரிசுத்தர் என்று எண்ணுகின்றோம். தீர்க்கதரிசிகளி

லும் மேலானவர் - அவரே மேசியா, உயிர்த்தெழுந்த கிறிஸ்து. அவரை மேற்கொள்ள உம்மாலாகாது. இத் தண்ணீரை குடித்தாலும் சரி குடிக்க மறுத்தாலும் சரி அவர் நாமத்தில் இதை இங்கு வைக்கின்றேன். அவர் நாமத்தினாலே உமக்குத் தாக சாந்தி யுண்டு. அவர் நாமத்திலேஉமக்குச் சமாதானம். அவர் நாமத்திலே உமக்காக ஜெபம் செய்வேன். அல்லா விட்டால் சபித்திருபேன். நீரும் ஒரு நாள் அந்த ஜீவ தண்ணீரைப் பருகி ஆன்ம சாந்தி டைய வேண்டுமென ஆசிக்கின்றேன். அவருடைய ஆவி நீர் மெய் வழி காணத்தக்கதாக உம்மை நடத்தவேண்டு மென்று ஜெபிக்கின்றேன். உம் ஆன்மா சாந்தியுறுக.

(சூசன்னாள் போய்விடுகின்றாள்)

சவுல்:—(இதயத்தில் குத்துண்டு) என்ன சந்திப் பிது? இயேசு தீர்க்கதரிசிகளுள் மேலானவராம் — மேசியாவாம். தீமைக்கு நன்மை செய்யத் தொண்டநக்குப் போதித்தனராம். அவர் சத்துருவாகிய என்னையும் நேசிக்கின்றனராம். என்ன அதிசயம்? அப்படிப்பட்டவரை யான் துன்புறுத்துவதா தேவ சித்தம்? நல் மனசாட்சியுடன் கடவுளுக்குச் சேவை செய்யத் துணிந்தேன். அம் மனசாட்சியே இப்பொழுது என்னைக் குத்துகின்றது — மெய்யாகவே இது பட்சத்தினால் நிறைந்த பாத்திரம்-அதைப் பானம் பண்ணத் தூண்டப்படுகின்றேன். அவர் தொண்டரைத் துன்புறுத்த நான் எடுக்கும் முயற்சி யனைத்திலும் எனக்கு மனச் சமாதானம் இல்லை. ஜீவ தண்ணீருண்டா? தாகமாயிருக்கின்றேன். இதைப் பானம் பண்ணுவேன். இதில் பிழையுண்டானால் கடவுளே எனக்கு மன்னியும். உண்மையைக் காண என் கண்களைத் திறந்தருளும். (குடிக்கின்றான்) தாகந் தீர்ந்தது. மறுபடியும் தாகமுண்டாகும். சவுலே, என் மனமே! ஒரு ஸ்திரீயின் சம்பாஷணை இவ்வளவு தூரம் மனதை மாற்ற இடங் கொடுக்கலாமா? எதிர்பாராத சந்திப்பு - இயேசுவின் நாமத்தில் தாக சாந்தி - பெரிய காரியமா? இதை மறந்து எழுந்து உன் கடமையைச் செய்ய விரைந்தோடு. தமஸ்குவுக்குப் போ-நில்லாதே - எனினும், இயேசுவின நாமத்தில் ஒரு கலசம் தண்ணீர் அவருடைய சத்துருவுக்குக் கொடுக்கப்பட்டதே!

(இன்னும் வரும்)

———:o:———

# பழமொழிகள்

1. பருத்திச் செடியும், பாலுமுள்ளவனுக்கு பஞ்சமில்லை.
2. கண்டது கேட்டது சொல்லாதே, காட்டு மரத்தில் நில்லாதே.
3. சிந்தின வீட்டிலே சேராது, மங்கின வீட்டிலே வாராது.
4. பேசத்தெரிந்தால் பிழைக்க வழியுண்டு.
5. சொல்லிச் செய்வோர் நல்லோர். சொல்லாமற் செய்வோர் பெரியோர். சொல்லியும் செய்யார் கசடர்.
6. சூதும் வாதும் வேதனை செய்யும்.
7. கோட் சொல்லும் வாய் காற்றுடன் கலந்த நெருப்பு.
8. செய்வன திருந்தச் செய்.

# பழங்களின் விசேஷம்

“ கிராமதூதன் ”

1. அன்னாசிப்பழச் (Pine apple) சாறு இடுப்பு வலிக்கும் (Lumbago) அதனைப் போன்றவற்றிற்கும் சிறந்த மருந்தாகும். தண்ணீர் சேர்க்காது பிரியம் போல் சருக்கரையும் சேர்த்து நாளொன்றுக்கு மூன்று நான்கு தடவை வேளை ஒன்றுக்கு ஆறு முதல் எட்டு அவுன்சாகக் (Ounce) குடித்து வந்தால், இரண்டு மூன்று நாட்களில் வலியைக் கேட்டு விடும்; ஐந்தாறு நாட்களில் அநேகமாகப் பூராவும் குணமாகி விடும். வலிவந்தவுடனே இந்தச் சாற்றைக் குடித்தால் வலியும் அதிகமாக வளராது.

2. பூசணிக்காயின் குணம் :—அனல் அழலை நீக்கும் அதிபித்தம் போக்குங் கனல் எனவே வன்பசியைக் காட்டும்—புனல் ஆரும் மிக்க ஐயம் உண்டாக்கும் மென்கொடியே! எப்போதும் சக்கரைப் பறங்கிக்காய் தான்.

3. கனிந்த பழங்களிலிருந்து பிழிந்தெடுக்கப்படும், சாறுகள் குழந்தைக்கு மிகச் சிறந்த உணவாகும். அவை குழந்தைக்கு போதிய சத்தைக் கொடுப்பது மல்லாமல், அதற்குமலக் கட்டும் சீதபேதியும் வராமல் தடுக்கும். ஆரஞ்சுச்சாறு உத்தமமானதால், அதனை நாள்தோறும் கொடுக்கலாம்; சாற்றைப் பிழிவதற்கு முன்னால் சில செக்கண்டு நேரம் அதனைக் கொதிக்கிற நீரில் அழுத்த வேண்டும். குழந்தைக்குப் பழச் சாற்றைப் பால் கொடுத்தவுடனே கொடுக்கக் கூடாது; அதனை கொடுக்கப் பால் கொடுத்து ஒரு மணி நேரமாவது ஆகவேண்டும்.

4. வாழைப்பழக் களி:—முற்றிய பழங்களின் தோலை நீக்கி, பின் அப்பழங்களைத் துண்டு துண்டாக்கி ஒவ்வொரு இராத்தல் பழத்திற்கும் ஒவ்வொரு இராத்தல் தண்ணீர் சேர்த்து அவற்றைச் சலிகோத துணிகொண்டு வடிகட்டக் கூடியதாகக் கரைத்து மெதுவாகும் வரை சுமார் ஒரு மணி நேரத்திற்குக்கொதிக்க வைக்க வேண்டும். அப்படி வடிகட்டிய பிறகு ஒவ்வொரு இராத்தல் பழத்திற்கும் ஒரு இராத்தல் சருக்கரையும் அதனோடு போதிய நரந்தக்காவ (citric acid) அல்லது மண்டிகக் காடி (tartaric acid) அல்லது எலுமிச்சம் பழச் சாறு நல்ல உருசி தரும்படியாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். நரந்தக் காடியையேனும் மண்டிகக் காடியையேனும் சேர்ப்பதற்காக இருந்தால், அப்படிச் சேர்ப்பதற்கு முன் அதனைத் தண்ணீரில் கரைத்துக்கொள்ள வேண்டும். சருக்கரையும் காடி அல்லதுசாறும் சேர்த்த பின்னும் ஒரு மணி நேரத்திற்குக் குறையாமல் அதனைக் கொதிக்க வைக்கவேண்டும். அதன்பின், வாயகன்ற கண்ணாடிப் புட்டி அல்லது சாடிக்குள் கந்தகத் திரியை எரிய விட்டு அதில் இந்தக் களியைச் சூடாயிருக்கும் பொழுதே போட்டுவிட வேண்டும். அதன் மேல் சூடாறியதும், கனத்த கடுதாசி (Parchment) போட்டு மூடி அதற்குமேல் தக்கை (cork) யாலேனும் மற்ற மூடி (Stopper) கொண்டேனும் மூடிவிட வேண்டும்.

(கிராம தூதன்) Industry.

---

உபாத்தியாயர் :— “அடே ராமு! ஒரே ஒரு வாலுள்ள பிராணி உனக்குத் தெரியுமா?”

மாணவன் :— “எங்க அக்கா, ஸார்!’

—A. T. ராஜன், விருதுநகர்

# மாடுகளை கவனிக்கும் விஷயம்

"கிராமதூதன்"

I. சாதாரணமாகத் தின்னும் தீவனத்தோடு மாடுகளுக்குச் சுண்ணாம்பும் (Calcium) எரியமும் (Phosphorus) சேர்த்து வரவேண்டும். அவை அவற்றின் வளர்ச்சிக்கு அவசியமாக இருக்கின்றன. அவித்த எலும்பு மாவும் (Steamed bone meal) சுட்ட சிப்பிச் சுண்ணாம்பும் (Shell lime) சமமாகச் சேர்த்துக் கொடுத்து வர வேண்டும். இரண்டும் எளிதாகவும் கிடைக்கக்கூடும்; அதிகக் கிரயமுமாகா. பதினெட்டு மாதம் வரை கன்றுகளுக்கு ஒரு அவுணம் சேர்த்து வர வேண்டும். பதினெட்டு முதல் இருபத்திநான்கு மாதம் வரைக்கும் பின் சினையாயிருக்கும பொழுதும் ஒரு அவுணம் சேர்த்து வந்தாலும் போதும். பால் வற்றிய பசுவிற்கு இரண்டவுணம் சேர்த்து வரவேண்டும் பால் கொடுத்துவரும் பசுவிற்குச் சாதாரணமாக இரண்டவுணமும் நாளொன்றுக்கு இருபது இராத்தலுக்கு மேல் பால் கொடுக்குமென்றால் அரை அவுணம அதிகமாகவும் சேர்த்து வர வேண்டும். விதைக்காளைக்கு இரண்டவுணமும் மற்றக் காளைக்குச் சாதாரணமாக ஒரு அவுணமும் 1500 ராத்தல் எடைக்கு மேலிருந்தால் ஒன்றரை அவுணம் அதிகமாகச் சேர்த்தும் கொடுத்துவர வேண்டும். இரண்டொரு நாள் சேர்த்துப் பிறகு நிறுத்துவதால் பயனில்லை; நெடுகலும் சேர்தது வர வேண்டும். நாளொன்றுக்கு மாடு ஒன்றுக்கு ஒரு பைசாவிற்கு மேல் போகாது.

(Indian Farming) P. Venkataramiah.

II. பசுக்களை, காளைமாடுகளை ஈக்கள் மொய்த்துக் கடிப்பது சில சமயம் சகிக்க முடிவதில்லை. இப்படிப் பல நாட்கள் மாதங்கள் தொடர்ந்தும் கடிததுவரக் காணலாம். ஈக்கடியால் முக்கியமாக நரம்புகள் தளர்ச்சியடைகின்றன. காளையாடுகளும் பலங்குன்றிப் போகின்றன. கறவைப் பசுக்களிலும் பால் குறைந்து போகிறது. பசுக்களில் பால் குறைந்துபோவதைப் பரிட்சித்துப் பார்த்திருக்கின்றனர். ஈக்கடிக்கு மருந்து தெளிக்கப்பட்டு வந்த ஐந்து பசுக்கள் நித்தம் சராசரி 1.6 இராத்தல் அதிகமாகக் கறந்தன. அப்படித் தெளிக்கப்படாத நான்கு பசுக்கள் முன்போலவே கறந்து வந்தன.

டைசல் நெய் (Diesel oil) 92 பாகம். தேவதாரு நெய் (Pine oil) 3 பாகம். ஆகச் சேர்த்து நித்தம் இரண்டு அவுணமாக இருபத்தொரு நாள் தொடர்ந்து ஐந்து பசுக்களுக்கு (Flit Sprayer) தெளித்து வரப்பட்டது. அதன் பின் சவர்க்காரம்போட்டு அவைகுளிப்பாட்டப்பட்டன; இதனால், ஈக்கடியும் அறவே நின்றுபோயிற்று; தோலுக்கு ஒருவித ஊனமில்லை.

Indian Farming.

III. மாடுகளை திட்டுவதும் அடிப்பதும் மிதிப்பதும் கெட்ட பழக்கம். அவற்றிற்குப் புத்தியில்லாமலில்லை. அவற்றுள் சிலவே சோம்பேறியாயிருக்கும். அடிப்பதால் சத்தம் போடுவதால் பதறிப் போகும்; பசுவின் பாலும் குறைந்து போகிறது. கல்லால் கம்பால் அடிக்கப்படும் காளை மாடும் சீக்கிரம் களைத்துப் போகிறது. அன்பாக நடத்தப்படும் மாடு, எசமானின் குறிப்பறிந்தும் வேலை செய்கிறது; அதிக நேரமும் வேலை செய்கிறது.

I. M. Moomaw.

IV. பாலில் வெண்ணெய் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. கன்று போட்டதும் இருக்கும் வெண்ணெய், பின் 7-8 வாரங்கள் வரைகுறைந்தேவரும்; பிறகு கொஞ்சங் கொஞ்சமாகக் கூடி வரும். பொதுவாக பால் இருப்பதற்குத் தக்கதாக, வெண்ணெய் குறையும். ஒரே நாளில், காலையில் மூன்றிலொரு பங்கு முதல் அரைவாசி வரை மாலைப் பாலைக் காட்டிலும் அதிகமாயிருக்கும். வெண்ணெய் உண்டாவதில் வித்தியாசமில்லை. யென்றாலும் மாலைப் பாலில் வெண்ணெய் குறைவாகத் தெரியும். இரவில், வெண்ணெய் தவிர்த்த கனப்பொருள்கள் (Solids not fat) பகலில் உண்டாவதிலும் அதிகமாக உண்டாகிறது. இந்தக் கனப்பொருள்கள் அதிகத் தண்ணீரை இழுத்துக் கொள்ளுகின்றன.

Indian Farming.

# கீரை வகைகள்

"கிராமதூதன்"

2. கோத்துக் கீரை :—கீரையை முதலாவதாகப் பொடியாக அரிந்து தண்ணீரில் அலசி எடுத்துக்கொள்ள வேண்டும். கீரையிலேயே தண்ணீருப்பதால் கொஞ்சமாகவே தண்ணீர் விட்டிருக்கும் வாயகன்ற சட்டியில் அதனைப் பொத்தி யமுக்கி உப்பும் போட்டுத் தீயை படபடவென்றெரிய விடாமல் இலேசான சூட்டிலேயே வேக வைக்க வேண்டும். வெந்ததும், வெந்த பருப்பும் சீரகமும் போட்டு கலக்கிக் கொள்ளவேண்டும். மிளகாய் வற்றலையும் கடுகையும் கொதிக்கிற எண்ணெய்யில் போட்டு கடுகு பொரியவும் எடுத்து அதனையும் கலந்து கொள்ள வேண்டும். அதற்குமேல் தக்காளிச் சாறேனும் எலுமிச்சம் பழச்சாறேனும் ஊற்றி உண்ணலாம்.

கீரையடை :—இரண்டு கோப்பை யரிசிக்கு ஒரு கோப்பைத் துவரம் பருப்பாகச் சேர்த்து நனையப் போட்டு அவற்றைக் களைந்து தண்ணீரை வடித்துவிட வேண்டும். கொஞ்சம் உப்பும் பச்சை மிளகாயும் ஈருள்ளியும் அதில் போட்டு எல்லாவற்றையும் அரைத்து மாவாக்கிக்கொள்ள வேண்டும். பொடியாக அரிந்த கீரையையும் போட்டு கலந்து கொள்ளவேண்டும். அதன் மேல் இருப்புச் சட்டியில் எண்ணெய் கொஞ்சமாக ஊற்றி மாவை அடையாகத் தட்டிப் போட்டுச் சுற்றிலும் எண்ணெய் ஊற்றியும் புரட்டிப் போட்டும் தவிட்டு நிறமாக வரவும் எடுத்துத் தின்னலாம்.

கீரைவடை :—இரண்டு கோப்பை உழுந்தைத் தண்ணீரில் ஊறப்போட்டுக் கழுவித் தண்ணீரை வடித்துவிட்டு நான்கு பச்சை மிளகாயும் உப்பும் சேர்த்தரைத்துக் கூழாக்கிக் கொள்ளவேண்டும். இரண்டு கைநிறைய அரிந்த கீரையையும் ஈருள்ளியையும் அதனோடு நன்றாகச் சேர்த்து மதித்துக் கொள்ளவேண்டும். பின் வடையாகத் தட்டி நன்றாகக் கொதிக்கிற எண்ணெய்யில் போட்டு தவிட்டு நிறமாகும் வரை வெந்ததும் சுடச் சுடத் தின்னலாம்.

மேயில்.

———(o)———

பிரசங்கீ :— உலகத்தில் மனிதனுக்கு உயர்ந்த ஸ்தானத்தை அடையும் வழி ஒன்றுதான் இருக்கிறது. அதாவது......................

கூட்டத்தின் ஒருவர் :— ஏணிமேல் ஏரிச் செல்வதாகும்

—A. T. ராஜன், விருதுநகர்

பேரன் :— "பாட்டி ! எனக்கு ஒரு அரையணாக் காசு கொடு."

பாட்டி :— என்னடாப்பா ! நீ தான் பெரிய பிள்ளையாயிட்டியே ! இன்னும் அரையணாக் காசு கேக்கிறீயே ?"

பேரன் :— "அப்படின்னா அரை ரூபாய் கொடு பாட்டி !"

—A. T. ராஜன், விருதுநகர்.

# பூர்வீக ராஜபுத்திரர்

ராஜபுத்திரர் இந்தியாவில் ராஜபுதனம் என்னும் நாட்டில் மாத்திரம் வசிக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. வட இந்தியா முழுவதும் பரவியிருக்கின்றனர். மனு தர்ம சாஸ்திரத்தில் சொல்லியபடி யுத்தப்பிரியரான க்ஷத்திரிய குலத்தவரைச் சார்ந்தவர்களென்று நம்புகின்றனர். ஈரான் தேசத்திலிருந்து இந்தியாவுக்குள் நுழைந்த ஓர் சித்திய ஜாதிகளென்று கருதப்படுகிறது. தாங்கள் இந்தியாவுக்கு ஆரியர் வந்தபின் வந்ததாக நினைக்கின்றனர்.

ராஜபுத்திரர் வீரமும் தளரா நெஞ்சும், கண்ணியமும் பொருந்திய யுத்த ப்பிரியர். குழந்தைகள் விளையாடும் விளையாட்டுப் பொருட்கள், ஈட்டி, அம்பு, கேடகம் முதலியவைகளே. யுத்தத்திற்குரிய அப்பியாசங்கள் சிறு பருவத்திலேயே பயிற்சிக்கப்பட்டு வந்தனவாம். ராஜபுத்திரர் ஏதாவது உடன்படிக்கை செய்யுமாகில் தம் உடைய வாளுக்குத்தான் பிரதிக்கினை செய்வாராம். தாம் மரிக்கினும் பிரதிக்கினைக்குத் துரோகம் செய்வதில்லை.

பெண்கள் மிக்க அந்தம் வாய்ந்தவர். சுயவரம் செய்யும் வழக்கமுண்டு. அதாவது பெண்களே தங்கள் வரன்களுக்கு மாலை சூடி, மணக்கும் சிறந்த பழக்கங்கள் அவர்களுள் காணப்பட்டதாம். எளிதில் பெண்கள் எதிரிகள் கையில் அகப்படார். அப்படி நேரிடினும், தங்கள் உயிரை உடனே மாய்த்துக்கொள்ள சிறிதும் அஞ்சார். இந்து மார்க்கத்தில் பூர்ண விசுவாசம் கொண்டு அதையே தழுவி வந்தனர். வேதங்களில் சொல்லிய கடவுளாகிய, இந்திரன், வர்ணன், அக்கினி பகவான் வணங்கினர். அபு மலையேலுள்ள இந்து கோவிலை நாம் பார்க்க முடியுமானால், அவர்கள் கட்டிட வேலையிலும், சிற்பசாஸ்திர வேலையிலும் சிறந்தவர்கள் என்பது தெரியவரும்.

யுத்த காலத்துக்குப்பின், பெரிய பெரிய மகாணங்கள் ராஜபுத்திர தலைவர்களுக்கு இறுமாக அளிக்கப்பட்டதாம். ஜனத்தொகையில் அவர்கள் அதிகம் இல்லாவிட்டாலும், இந்தியாவின் பல மகாணங்களுக்கு அரசர்களாக ராஜபுத்திரரே தெரிந்துகொள்ளப் பட்டனர். அரசாங்க விஷயத்தில் அதிக பிரீதி கிடையாது. சேனையில் சேவை செய்ய பிரீதி அதிகம் உண்டு. காவல் காற்போன், போலீஸ் வேலை செய்ய மெத்த அவா உண்டு. அவர்களுள் ஒற்றுமை கிடையா. ஆகவே இதர தேசத்தார் அவர்களை முறியடித்து ராஜ்ஜியங்களைக் கைப் பற்றினர்.

———(o)———

உபாத்தியாயர் :— வாயுமாணி விழுந்தால் என்ன அறிந்துகொள்ளலாம்

மாணவன் .— சுவரில் அதை மாட்டி யிருந்த ஆணி விழுந்து விட்டதென அறிந்துக் கொள்ளலாம்.

Frem Asthana, Azamgarh.

ஒருவர் :— "பிரமாச்சாரி எப்படி சந்தோஷமாக இருக்க முடியும் ?"

மற்றொருவர் :— பிரமாச்சாரியாகவே எப்பொழுதும் இருப்பதினால் !"

—T. A. ராஜன், விருதுநகர்.

# சொப்பன பலன்

[ஏ. டி. ராஜன்]

ஒரு தடவை நான் ரயில் பிரயாணம் செய்கையில் ராமுவைச் சந்தித்தேன் வழக்கம் போலவே அவன் தன் சட்டைப் பைக்குள் கையைவிட்டு ஏழெட்டு ஜாதகங்களை வெளியில் எடுத்தான். நான் சிரிப்பை அடக்கிக்கொண்டு "இவைகளெல்லாம் இன்றைய தபாலில் வந்த ஜாதகங்களோ?" என்று கேட்டேன். அதற்கு ராமு "அதை ஏன் கேட்கிறாய்! ஏன்தான் தை பிறக்கிறது என்று இருக்கிறது எனக்கு, பொழுது விடிந்தால் பத்து ஜாதகம் இந்தப் பெண்ணைப் பெற்றவர்களிருக்கிறார்களே, அவர்களை என்னவேண்டுமானாலும் செய்யலாம் நான் என்னமோ ஒரு பெண்ணைத்தான் கலியாணம் பண்ணிக்கொள்ளப் போகிறேன். அதற்கு இத்தனை பேர் ஏன் போட்டி போட வேண்டும்?" உம்......இதைப் பார் இதுதான் நேற்று வந்த ஜாதகம் என்று கூறி ஒன்றைக் கொடுத்தான்.

[ராமுவைப்பற்றிக்கொஞ்சம் சொல்லத்தான் வேண்டும். அவனுக்கு வயது முப்பதாகியும், கலியாணம் ஆகவில்லை. அவனுக்கு ஆஸ்தியொன்றும் கிடையாது. படிப்பும் பூஜ்ஜியமே வேலையும் இல்லை, சோம்பேறியாகவே திரிகிறான். எப்பொழுதும் கலியாணப் பேச்சையே பேசிக்கொண்டிருப்பான். யாராவது கலியாணப் பேச்சை எடுப்பின், இடிவிழுந்தபோதிலும் அந்த இடத்தை விட்டு நகரமாட்டான்.]

ராமு கொடுத்த ஜாதகத்தை மரியாதைக்காகப் பார்த்துவிட்டு திருப்பிக் கொடுத்தேன். நான் பேசாமல் இருந்துவிடவே அவன் தானாகவே அந்த ஜாதகப் பெண்ணின் அழகையும், குண விசேஷங்களையும், அவள் வீட்டின் ஒவ்வொரு சாமானைப் பற்றியும் வர்ணிக்கத் தொடங்கினான். நான் பொறுமையோடு கேட்டுக்கொண்டே வந்தேன்.

ரயில் குளித்தலை ஸ்டேஷனில் நின்றதும் நாங்கள் இருந்த வண்டிக்குள் இரண்டு மூன்று பாட்டிமார்களும், ஒரு யௌவன சிறுமியும் ஏறிக்கொண்டனர். என்னிடம் வர்ணித்துக் கொண்டே வந்த ராமு சட்டென்று தன் பேச்சை நிறுத்தினான். ரயில் புறப்பட்டதும் மறுபடியும் ராமு பேச ஆரம்பித்தான். ஆனால் அவன் கவனம்மட்டும் அந்த நால்வரின்மீது தான், பின் மறுபடியும் தன் பேச்சை நிறுத்தினான். நான் "நல்லகாலம் என்று எண்ணிக்கொண்டு ஒரு புஸ்தகத்தைப் படிக்கலானேன். ஆனால் அதில் வெகு நேரம் கவனம் செலுத்த முடியவில்லை, ஏனென்றால் ராமு அடிக்கடி என் தொடையைத் தட்டி, "அதோ பார் அந்தப் பெண்ணின் தளுக்கை என்று என் காதில் சொல்லிக்கொண்டிருந்தான். மேலும் அந்த பாட்டிகள் மூவரும் தொண்டையைக் கிழித்து பேசிக் கொண்டிருந்தனர்.

ஒரு பாட்டி:—அடியே! அப்த அதிசயத்தை என்னன்று சொல்றதடி! விடியறபோது தான் சொப்பனங் கண்டேன் நம்பராஜத்துக்கு யாரோ வரன் கொண்டு வந்தாப்போல இருந்தது.

இன்னொருபாட்டி:—விடியறபோது சொப்பனங் கண்டா கைமேலே பலன் கட்டாயம் கிடைக்காமல் இருக்காது. இப்படித்தான் கேள் எங்காத்துக்காரர் வண்டியிலிருந்து விழுந்தாப்போல விடியறபோது சொப்பனங் கண்டேன். அதுபோல காலையிலே அவர் அப்படி விழுந்ததாகவும் உடனே புறப்பட்டு வரவும், என்று தந்தி வந்ததுன்னா!

மூன்றாம் பாட்டி:—இதைச் சொல்லப் போறயே, நம்ப பங்கஜத்துக்குப் பிள்ளைக் குழந்தை பிறந்தாப்போலே சொப்பனங் கன்

டேன் அதே போல தானே கடைசியிலே ஆச்சு !

முதல் பாட்டி:—என்னமோ, ராஜத்துக்கு தக்கவரா வந்து சேரனும் அதுவே போதும்.

இரண்டாம் பாட்டி.—கிடைக்காம எங்கே போகும். கட்டாயம் கிடைக்கத் தான் செய்யும்ன !

இந்த விதமாக சொப்பனத்தைப் பற்றியே வம்பளந்து கொண்டிருந்தனர். நான் அவர்களுடைய சம்பாஷணையை ராமு உருக்கமாக கேட்டுக் கொண்டிருந்ததை கவனித்துக் கொண்டிருந்தேன். ராமு என் காதின் பக்கத்தில் "ராஜத்தைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டான். "யார் ராஜம்?" என நான் கேட்டபோது அவன் முகத்தை கடுத்துக் கொண்டு "அதோ கறுப்பு டிரங்கு பெட்டி வைத்திருக்கிறாளே ! அந்தப் பெண்" என்றான். எனக் கொன்றும் அபிப்பிராயம் இல்லை என கூறிவிட்டேன்.

அவனுக்கு முகம் சின்னதாயிற்று. என்றாலும் சமாளித்து அவர்களுடன் நாமும் அடுத்த ஸ்டேஷனில் இறங்கி மறு வண்டியில் பிரயாணம் செய்வோம் என்றான். முதலில் நான் மறுத்த போதிலும் எப்படி அவன் அவர்கள் மனதை மயக்கி அவளைக் கலியாணம் பண்ண சம்மதிக்க வைக்கப்போகிறான் என்பதை அறிய ஆவலானேன். ஆதலால் அவன் கூறியதற்கு சம்மதித்தேன்.

அடுத்த ஸ்டேஷனில் அந்த நால்வரும் இறங்கவே நாங்களும் அவர்களுடன் இறங்கினோம். ஸ்டேஷனை விட்டுக் கொஞ்சம் தூரம் சென்றதும், ராமு எனக்கு முன்னால் கொஞ்சம் வேகமாக நடந்து சென்று அந்தப் பாட்டிகளுடன் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தான். அவர்களில் ஒரு பாட்டி, "ஏனப்பா ! கணேசய்யர் வீடு உனக்குத் தெரியுமாப்பா? "எனக் கேட்டாள். அதற்கு ராமு" இரட்டை தெருவிலிருக்கிறது "நானே உங்க கூட வந்து காண்பிக்கிறேன்" என்றான். பின் பாவம் ! சிறு குழந்தை, எப்படித்தான் இந்தப் பெட்டியைத் தூக்கும் என்று பெட்டியை தன் தலையில் தூக்கி கூடவே நடந்தான். ராமு, தன்னுடைய காரியம் நிறைவேறுமென நினைத்தான்.

மெல்லபேச ஆரம்பித்தான் ராமு. "பாட்டியம்மா! ஒரு சமாசாரம் சொல்லனும்னு இருந்தேன் ரயிலில் முடியவில்லை." என போட்டான் லேசா ஒரு போடு. அதற்கு பாட்டி, ஒருத்தி "எல்லாம் நல்ல சமாச்சாரம் தானே?" எனக் கேட்டாள். "ஆம், அதாவது விடியறபோது சொப்பனங் கண்டேன். ஒரு பெட்டி கீழே கிடந்தது அதிலே இதே எழுத்துக்கள் தான் பொறிக்கப்பட்டிருந்தது. மேலும் அது என் சொந்தக்காரப் பெண்ணுடையது. அவளிடம் கொண்டுபோய் கொடுத்தேன். அவள் தன்னைக் கட்டாயம் கலியாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்று பிடிவாதம் செய்யவே நான் கலியாணம் பண்ண நேரிட்டது" என சரடு விட்டான். அப்போது ஒரு பாட்டி "அட தடிக்கட்டையிலே போறவனே! என்னையாடா கலியாணம் பண்ணப் போறே ! இந்தப் பெட்டி என்னுடையதல்லவா ! உன் தலையிலும் சொப்பனத் தலையிலும் இடிவிழ" என்றாள். அப்படியே நடுச்சாலையில் பெட்டியைப் போட்டு விட்டு ஓட்ட மெடுத்தான் ராமு. நான் அவனை மன்றாடி எவ்வளவோ கூப்பிட்டும் அவன் காதில் விழவில்லை.

———(o)———

சொந்தக்காரன் : மாமரத்தின்மேல் ஏன் ஏறியிருக்கிறாய் ?

பையன்: ஐயா, ஒரு பழம் கீழே விழுந்தது — அதை அங்கே ஏறி இருந்த இடத்தில் வைக்கின்றேன்.

Krishna Gupta, Raipur.

# தன்னல மறுத்தல்.

(M. V. ராமச்சந்திரன் 5-வது பாரம்)

The Union High School, Coimbatore

மக்கள் இனத்தினருக்கு உள்ள சிறப்பு, மற்ற உயிரினங்களுக்கு இல்லாத பகுத்தறிவை பெற்றிருத்தலே யாகும். இயற்கையறிவு எல்லா உயிர்களுக்கும் உண்டு. மக்கள் தம் பகுத்தறிவால் புதுமை புதுமையாகப் பல உண்மைகளை உணரலாம். இயற்கையறிவொன்றே யுடைய உயிரினங்களோ தாம் ஆதியில் அறிந்த இயற்கை யுணர்ச்சிக்குக் கீழும் போவதில்லை, மேலும் போவதில்லை உயிர்கள் எல்லாம் பொதுவாகத் தம் இயல்பை நாடும் தன்மையன. தன்னைத்தான் காத்துக்கொள்ள முயல்வது என்பது இயற்கை வழிகளுள் முதலாவதாகும். தன்னைக் காக்கும் நெறியிலும் மற்ற உயிர்களுக்கு இயற்கையிலேயே பலவகைத் துணைகளும் கருவிகளும் அமைந்துள்ளன. மனிதர் இனத்துக்கோ பல வகைப்பட்ட ஆயுதங்கள் வேண்டியிருக்கின்றன.

ஒரு குடியானவன் தன் மனைவியும் மகனும் பின்வர ஆடொன்றை ஓட்டிக் கொண்டு ஒரு காட்டாற்றில் இறங்கினான். திடீரென்று பெருவெள்ளம் வந்தது. ஆட்டை விட்டுவிட்டு மனைவியையும் மகனையும் பிடித்துக் கொண்டான். மனைவி தடுமாறுவதை அறிந்ததும், மகனைக் கைவிட்டு மனைவியைச் சிறிது தூரம் அழைத்துச் சென்றான். பின்பு அவளைப் பற்றியிருப்பதால் தனக்கே ஆபத்து நேரும் என்று தோன்றியதும், அவளையும் கைவிட்டு நீந்திக் கரையேறினான். இச் சிறிய கதையால் மனித வினத்தின் பொதுவியல்பு விளங்கும். மனிதன் தன்னால் இயன்றளவு மற்றவர்களுக்கு உதவி செய்ய முயல்வான். தனக்கே தீங்கு வருவதாய் அறியும்போது பிறவற்றை யெல்லாம் கைவிட்டுத் தன்னைக் காத்துக்கொள்ள முயல்வதே மனித சுபாவ மாகும்.

ஆயினும் நல்லறிவின் முதிர்ச்சியாலும் நல்லோர் சேர்க்கையாலும், மனிதன் தன் சாமான்ய குணத்தை மறந்து, தன்னலத்தைப் பொருட்படுத்தாது பிறர்க்கு உதவி செய்யத் துணிதலும் உண்டு. இத் தன்மையே தன்னல மறுத்தல் என்று பாராட்டப்படும் சிறந்த குணமாகும்.

உலகிற் காணப்படும் மனித ரெல்லாரும் இத்தகைய உயர்குணம் வாய்ந்தவராய் இருத்தல் இயலாது. லக்ஷத்தில் ஒருவர், கோடியில் ஒருவரே உண்மையில் இப் பெருங் குணம் வாய்ந்தவராயிருப்பார்.

இந்திரன் விருத்திராசுர வதத்தின் பொருட்டுத் ததீசி முனிவரிடம் முதுகெலும்பைப் பெற்று வச்சிராயுதமாக்கிக் கொண்ட புராணக் கதையை யாவரும் அறிந்ததே.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு."

என்ற திருக்குறள் வேதமே சான்று பகரும். சிபி எனும் அரசன், புறாவின் பொருட்டாகத் துலையில் ஏறித் தன் உடம்பையே வழங்கத் துணிந்ததும் இப் பெருங் குணத்தைக் காட்டும்.

இந் நாளில் பனி நிரம்பிய தென் கோட்டுப் பெருங்கடலினும், வட கோட்டுப் பெருங்கடலினும், இமயமலையினும், வெயிற் கொடுமையும் மணல்வெளியும் நிறைந்த

பாலைவனங்களிலும், பிறர் கண்ணுற் காணாத காடுகளிலும், நாடுகளிலும் பலவகைப்பட்ட ஆயுதங்களை உதவியாகக் கொண்டு அறிஞர் பலர் ஆராய்ச்சி செய்வதற்காகப் பிரயாணம் செய்து நக்கின்றார்கள். இப் பெரியோர் செய்யும் அரிய ஆராய்ச்சிகளால் உலகத்தாருக்குப் பின்னாளிலே பெருநலம் விளையும். ஆகையால் அவை தன்னல மறுத்த செயல்களாம்.

இவ் வாராய்ச்சியாளர்கள் பூமியிலும், பாதாளத்திலும், ஆகாயத்திலும் உண்மையை ஆராயக் கருதித் தம் உயிரையே தியாகம் செய்கின்றனர். சில சாஸ்திரிகள் தம் அபூர்வ ஆராய்ச்சிகளால் தம் அவயவங்களையும், சில சமயங்களில் உயிரையும் இழக்கின்றனர். ஒரு நோயின் கொடுமையை பரீக்ஷை செய்ய விரும்பி, அதனை வருவிக்கக்கூடிய மருந்துகளைத் தம் உடம்பில் ஊசியால் ஏற்றிக் கொண்டு, அந்நோயைப் போக்கும் மருந்தைக் கண்டுபிடித்து உலகிற்கு உபகரிக்க முயன்ற உத்தமரும் சிலர் உளர். இத்தகைய அருஞ் செயல் புரிந்தோரெல்லாம் தம் பூத வுடம்பு அழிந்தாலும் புகழ் உடம்பு அழியாத புண்ணியராவர்.

இவ் வுடம்பே பிறர்க் குதவியாய்ப் பயன்படுமாறு தோன்றியது என்ற எண்ணமுடையாராய்ச், சில பெரியோர் தம் வாழ்நாள் முழுவதும் உழைத்து, அதனால் வரும் பழிப்பையும் பொருட்படுத்தாது பெருநலம் விளைத்திருக்கின்றனர். அரச செல்வத்தைத் துறந்து உலகிற்கு உண்மை யுணர்த்தத் துணிந்த புத்த தேவரைக் காட்டிலும் பரோபகார சீலர் உலகில் உளரோ? இவ்வரும் பெருங் குணத்தை இளமைப் பருவம் முதலே சிறிது சிறிதாகப் பெற்றுவருவோமாயின், மஹான்களைப்போல பரோபகாரிகளாய் விளங்க இயலாதாயினும் மனிதப் பிறவி பெற்றதற்குரிய பேற்றை யாவது அடையலாம் என்பது திண்ணம்.

———(o)———

## விகடம்

மாணவன் .— செய்யாத குற்றத்திற்குத் தண்டனை யுண்டா?

உபாத்தியாயர் :— கிடையாது

மாணவன் :— வீட்டுக் கணக்குச் செய்யாத குற்றம் என்னுடையது தண்டனை இல்லாதது மிகவும் நல்லது.

G. Nageswar Rao, Secunderabad.

பரீட்சைக் கேள்வி :— இக் காரியத்தைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?

மாணவன் :— தங்கள் அபிப்பிராயமே என் அபிப்பிராயம். அதில் யாதொரு பேதமுங் கிடையாது. அந்த அபிப்பிராயத்துக்கு பூரண சம்மதந் தருகின்றேன்.

Yashwant Fadanris, Raipur.

# " நாவிதன் "

**by M. S.** பந்தன்

சிவபுரி ஒரு சிறிய கிராமம். அதன் வடக்கே கண்ணைக்கவரும் மலைகளும், தெற்கே வளமுள்ள வயல்களும், கிழக்கே ஆற்றின் வடிகால் நிலங்களும் மேற்கே பரந்த மைதானமும் எல்லையாக அமைந்திருந்தன. இதுவுந் தவிர, இதைச்சுற்றி இடைச்சேரி, சேராஞ்சேரி, பறைச்சேரி, அணைக்கட்டுச்சேரி, கடைச்சேரி என்ற பல கிராமங்களுமிருந்தன.

இவ்வூரின் ஒரு மூலையில் ஓர் நாவிதன் வசித்துவந்தான். அவன் அவ்வூருக்குப் பாரம்பரை அம்பட்டன். அவன் அதிக மரியாதையும் அடக்கமும் உள்ளவன். ஒரு நாள் அவனுக்குத் தெய்வீகச் செயலாய் இருகுண்டு மணி எடையுள்ள பொன் குண்டு அகப்பட்டது. "கிடையாதவன் பெண்டு படைத்தால் காடு மேடெல்லாம் இழுத்தடிப்பது"போல, அவன் தன்க்குத்தானே தன்னை ஒருமாதிரியாக நினைத்துக்கொண்டான்.

அச்சமயத்தில் பக்கிரி ஐயங்கார் என்ற பெயர்கொண்ட ஒரு பிராமணன் க்ஷௌரம் பண்ண அவனை அழைத்தான். அதற்கவன், "நான் பெரியவனாய்விட்டேன். என் மாமன் இருக்கான்" என்று மிகத் தைரியத்தோடும் சலிப்போடும் சொல்லிவிட்டான்.

மறுநாள் அந்த அம்பட்டன் அக்கிராமத்திற்கு அடைப்பத்துடன் சென்றிருந்தபோது பக்கிரி ஐயங்கார் அவனைக் கூப்பிட்டு, "நேற்று கூப்பிட்டா ரொம்ப கிராக்கி பண்ணினயே என்ன ? என்று சொல்லிக்கொண்டே பூசணிப் பழம்போன்ற தொந்தியை யுடைய அவர் எழுந்து, பல ஆட்களைக்கொண்டு அடிக்கும்படி ஏவினார். அவர்கள் அவனை எவ்வளவு அடிக்க முடியுமோ அவ்வளவும் அடித்து, அடைப்பத்தையும் பிடுங்கி அவிழ்த்து பார்த்ததில் பொன் இருந்தது. பின்பு, உடனே அதை எடுத்துக்கொண்டு தலைக்குப் பின்னுமொரு அடிகொடுத்தார்கள். பாவம்! நாவிதன் இரத்தஞ் சொட்டும் நிலைமையிலேயே வீடுவந்து சேர்ந்தான். இக்காட்சியைக் கண்ட அவன் மனைவி யாது காரணம் என்று வினவ, அதற்கவன், "இது தெரியாதா! வாய்கிரதஞ் சொல்லி உதைக் கிரதம்பட்டால் இரத்தம் கிரதங்கிரதமென்று இவ்விதம் சொட்டும்" என்றான்.

ம. சம்பந்தன்
ஐந்தாம்பாரம் பி,

ஸி. எஸ். எம். உயர்தர பாடசாலை,
அரக்கோணம்.

———(o)———

உபாத்தியாயர் : சூரியனா, சந்திரனா? எது மிகவும் பிரயோஜனமானது ?

மாணவன் : சந்திரன் மிகவும் பிரயோஜனம் - சூரியன் பட்டப்பகலில் பிரகாசிக்கிறது. சந்திரனோ இரவில் பிரகாசிக்கின்றது.

R. Venkataseshan, Katuputur.

# கெனில் வோர்த்

## (Sir Walter Scott)

### VI பாகம்.

இருண்ட நேரத்தில் ஆமியும் வேலண்டும் இரு குதிரைகள் மீதேறிப் பிரயாணஞ்செய்து மறுநாள் காலையில் டானிங்டன் வந்தடைந்தனர். அங்குள்ள சத்திரத்தில் ஆமி சற்று நேரம் தூங்கி இளைப்பாறினள். வேலண்ட் தங்களுக்கு வேண்டிய துணிகள் வாங்கினன். சாதாரண ஆடை அணிந்துகொண்டனர். ஆமி வேலண்டின் சகோதரியாகத் தன்னைப் பாவித்துக்கொண்டனள்.

மத்தியானம் இருவரும் மறுபடியும் புறப்பட்டனர். கெனில் வோர்த்தில் நடிக்கப்போகும் நாடகக் கூட்டத்தார் இவர்களுக்கு சற்று முன்னே போவதாகக் கேள்விப்பட்டு அவர்களோடே சேர்ந்துகொள்ள ஆசைப்பட்டனர். அவர்களிடம் நெருங்குகையில் கம்னர் மலையிலிருந்து ரிச்சர்ட் வார்னியும் வேறொருவனும் தங்களைத் தொடர்ந்து வருவதைக் கண்டனர். அதிசீக்கிரமாய் நாடகக் கூட்டத்தைச் சேர்ந்தனர். நடிகருள் ஓர் ஆளுக்குச் சுகக்கேடுண்டானதால் அக்கூட்டம் கலைந்து நின்றது.

ஐந்து நிமிஷத்துக்குள்ளாக வார்னியும் மைக்கலும் வந்து சேர்ந்தனர்.

"கெனில்வோர்த் செல்லும் நாடகக் கூட்டத்தாரா?" என்று வார்னி கேட்டு, அறிந்துகொண்டனன்.

"ஏன் இன்னும் இங்கே தாமதிக்கின்றீர்கள? எவ்வளவு வேகமாய் வந்தாலும் சரியான நேரத்துக்குள் அங்கு வந்து சேரமுடியாதே" என்றும் கேட்டனன்.

பேய் வேஷம்போட்ட பையன் வந்து, 'நடிகருள் ஒருமாது சுகவீனமாயிருப்பது பற்றியே இத்தாமதம் ஏற்பட்டது. அவளுக்கு ஒரு ஏற்பாடு செய்துவிட்டு வருவோம்" என்றனன்.

"எங்களுக்கு முன் குதிரைமீதேறி வந்த இருவரும் உங்களைச் சேர்ந்தவரோ?" என்று வார்னி கேட்டனன். அதற்கு அப்பையன் வார்னியின் காதில் சொன்னதாவது :— "அந்த மனுஷன் பிரதான பேய் வேஷம் போடும் ஆள். அவனோடு வந்த பெண் சுகவீனமுள்ள மாதுக்கு உதவி செய்யும்படி அவன் கொண்டு வந்த ஆள்."

திருப்தியடைந்தவனாய் வார்னி அப்பையனுக்குப் பணங்கொடுத்துத் தன் வழியே போயினன்.

பையனே வேலண்டண்டை நெருங்கி "நீங்களிருவரும் யாரென்று அவருக்குச் சொல்லிவிட்டேன். நான் யார் என்று தெரியுமா?" என்று வினவினன்.

அதற்கு வேலண்ட் "ஒன்று டிக்கி ஸ்லட்ஜ் அல்லது ஒரு குட்டிப் பேயாயிருக்க வேண்டும்" என்றனன்.

டிக்கி மிகவும் துஷ்ட பையன் - முன்னமே பெர்க்ஷையரில் இருக்கையில் வேலண்டுக்குத் தெரியும். நண்பருக்கு உண்மையாயிருப்பவன். அவன் கூடவந்தவள் யார் என்று கேட்டு வேலண்டின் சகோதரி எனத் தெரிந்துகொண்டனன். வேலண்டும் அவன் சகோதரியும் ஜாலவித்தைக்காரனாகவும் குழல் ஊதும் பாடகியாகவும் நாடகத்தில் சேர ஆசித்தனர்.

வேலன்டை நாடகத் தலைவரிடம் டிக்கி அழைத்துச் சென்றனன். ஜாலவித்தையைக்

காண்பிக்கும்படி தலைவர் கேட்டனர். தன் சாமர்த்தியத்தைச் சகலரும் கண்டு மெச்சிக் கொள்ளும்படி சில வேலைகளைச் செய்து காட்டினன். தன் சகோதரி பிரயாணத்தினால் களைப்பாயிருக்கின்றபடியால் அச்சமயம் அவள் ஒன்றும் பாடிக்காட்ட முடியாது என்று சொன்னான்.

எனினும் டிக்கி அப்பெண்ணின் காரியத்தை அறிய ஆசைபட்டு அலைந்து திரிந்ததினால், அன்றிரவு அங்கிருப்பது நல்லதல்ல என்று கண்டு வேலன்ட் முன்னேகி ஒரு சத்திரத்தில் இராத்தங்கி மறுநாள் இக்கூட்டத்தார் வரும்போது சேர்ந்துகொள்ளலாம் என்று எண்ணிப் புறப்பட்டனன்.

ஆமிக்கு அன்றிரவு நித்திரை வரவில்லை. ஆகையால் அதிகாலையில் எழுந்திருக்கக் கூடவில்லை. வேலன்டுக்கோ பயம் பிடித்தது. அநேகந்தடவைகளில் பிரயாணத்தில் அவள் மயங்கி விழப்போயினள். அவள் மதிமயங்கினவள்போல் காணப்பட்டனள். கெனில்வோர்த்துக்குத் தான்மாத்திரம் சென்று டிரசில்லியனிடம் சொல்லலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தபோது அவள் உடுத்திப் புறப்பட ஆயத்தமாயிருந்தனள் என்று கண்டனன். தனக்குச் சாப்பிட பிரியமில்லையென்றும் கூடிய சீக்கிரம் கெனில்வோர்த் போகவேண்டுமென்றும் அவள் அவனிடம் சொன்னாள்.

வேலன்டுக்கு மனமில்லை அவள் மனதிலுள்ளதை அறிய ஆசைப்பட்டனன். அந்நாட்டார் அனைவரும் கெனில் வோர்த்துக்குப் போய்க் கொண்டிருந்தனர். மோசம் வராதபடி அவளை அழைத்துச் செல்லுவதற்கு டிரசில்லியன் மூலமாய் சஸ்செக்ஸ் பிரபுவின் ஆட்களைக் கொண்டு வரலாமென்று அவன் ஆலோசனை சொன்னதற்கு அவளுக்குக் கோபம் மூண்டது, "லீஸ்டர் பிரபுவின் விரோதி தரும் பாதுகாவல் எனக்கென்னத்திற்கு?" என்றனள். லீஸ்டர் பிரபுவின் மேல் அவளுக்குள்ள அபிமானம் வேலன்டுக்குத் தெரியாது. பின்னும் "என்னைப்பற்றி டிரசில்லியனுக்கும் சொல்லக்கூடாது. அதினால் எனக்குக் கேடுண்டாகும், அவருக்கும் ஆபத்து. என்னை கெனில்வோர்த் கொண்டுபோய் சேர்த்தாயானால் உன் வேலை ஒய்ந்தது. மற்றதை நானே பார்த்துக் கொள்ளுவேன்" என்று ஆமி கூறினள்.

இதற்கிணங்கி வேலன்ட் குதிரைகளைக் கொண்டுவந்தனன். அவளை ஆகாரம் அருந்தும்படி அழைத்தனன்.



எலிசபெத் அரசி.

வழிமேல் கூட்டம் அதிகம், நடிப்பவரும் விருந்தினரும் தவிர வேறொருவரும் அரண்மனைக் கோட்டைக்குள் பிரவேசிக்கலாகாது. ஊர்வலம் செல்லும்போது அதில் யாரும்

சேர்ந்து கொள்ளலாம். கூட்டத்தின் திரளும் அமளியுமே அரசிக்குப் பிரியம்.

இவர்கள் பிந்தி வந்ததினால் நாடகக் கூட்டத்தாரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இவர்கள் மாத்திரம் அரண்மனைக் கோட்டை வாசலண்டை நின்றனர். எவ்வாறு உட்செல்வது என்று எண்ணித் திகைத்துக் கொண்டிருக்கையில் அவர்கள் உட்பிரவேசிக்கும்படி அழைப்புப் பெற்றனர் - பிந்தி வந்ததற்காகக் கோபிக்கப்பட்டனர். ஏனெனில் டிக்கி இவர்கள் பிந்தி வருவார்கள் என்றும் வந்தவுடன் துரிதப்படுத்தி உள்ளே அனுப்ப வேண்டுமென்றும் சொல்லி வைத்திருந்தனன்.

அங்கு ஒரு மரத்தில் ஏறிக் காத்துக்கொண்டிருந்த டிக்கி வேலன்ட் குதிரையில் குதித்து இறங்கி அவர்களை வழி நடத்தினன்.

வேலன்ட் ஆமியுடைய உத்தரவுக்காகக் காத்துக் கொண்டிருந்தனன். அங்கு வந்த வேலைக்காரனை ஆமி அழைத்துத் தன்னை லீஸ்ட்டர் பிரபுவினிடம் கூட்டிக்கொண்டு போகும்படி கூறினள்.

"அரசியிடமிருக்கும் பிரபுவை அழைத்தனுப்பினால் தனக்கு அடி கிடைக்கும்" என்று சொல்லித் தப்பித்துக் கொண்டனன் அவ் வேலையாள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் ஆச்சரியப்பட்டனர். சிலர் பரியாசம் பண்ணினர்.

வேலன்ட் அங்குள்ள ஒருவனுக்கு பணங் கொடுத்து ஓர் அறையைச் சம்பாதித்தனன். அவ்வறையில் எழுதும் வசதியிருந்த படியால் ஆமி லீஸ்ட்டர் பிரபுவுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினள்.

வேலன்ட் ஆகாரம் கிடைக்கும் இடத்திற்குப் போய் வேண்டிய ஆகாரம் கொண்டு வந்தனன்.

"நல்ல நண்பா! இக்கடிதத்தை லீஸ்ட்டர் பிரபு கையில் சேர்க்கமாட்டாயா? இதுவே நீ எனக்குச் செய்யும் கடைசிச் சேவை - அவர் அதை படிக்கும்போது அவர் முகத்தை கவனித்துப் பார்" என்று ஆமி வேலன்டை வேண்டினள்.

இதற்கு வேலன்ட் இணங்கி அவள் ஆகாரம் அருந்த வேண்டுமெனறும் அவ்வறையை அடைத்துக்கொண்டு உள்ளேயே இருக்க வேண்டுமென்றுங் கூறினன். அவளும் இணங்கினள்.

வேலன்ட் இக்கடிதத்தை டிரசில்லியனுக்குக் காண்பித்து அவன் ஆலோசனையைக் கேட்க விரும்பினன் - ஏனெனில் ஆமிக்குச் சரியான மனநிலை இல்லை என்றறிந்திருந்தனன்.

கம்னர் மனையில் கஷ்டமிருந்ததையும், அதற்கு வார்னியும் ஒத்திருந்தனனென்றும், வேலன்ட் அறிந்திருந்ததினால் வார்னி இருக்கும் கெனில்வோர்த்துக்கு அவள் வந்தது ஞானமல்ல என்று எண்ணினன். டிரசில்லியனை அவள் நம்பி அடைக்கலம் பெறுவள் என்று எண்ணினது தவறு என்று நினைக்கும்படியாக எதிர்பார்த்ததற்கு விரோதமாக வார்னியின் பிரபுவுக்கே கடிதம் எழுதலாயினள்.

எல்லாம் டிரசில்லியனுக்கு நன்றாய்த் தெரியும் என்று நம்பி அவனிடம் ஆலோசனை கேட்கத் துணிந்தனன். "அவர் ஆலோசனைப்படி நடந்தபின் இவ்விடத்தை விட்டேகுவேன். அல்லாவிட்டால் ஆமியைக் கொண்டுவந்து இங்கு சேர்த்ததால் ஆபத்துக்கு ஆளாவேன்" என்று வேலன்ட் கூறினன்.

(தொடரும்.)

———(o)———

# கடமையே சிற்றின்பத்தினும் முதன்மையானது

M. Devadas

ஓர் ஊரிலுள்ள தலையாரி ஒருவர் வீட்டில் ஒரு நாடகம் நடந்தது. அத் தலையாரியின் மேய்ப்பர் அதை நடித்துக் காட்ட வேண்டியவர்கள்.

ஜனங்கள் திரள் திரளாய் அந்த வேடிக்கை பார்க்கப் போய்க் கொண்டிருந்தனர். அந்த நாடகத்தை எழுதிப் பயிற்சி கொடுத்தவன் ஜெயதாஸ். அவன் இராப் பள்ளிக்கூடத்தில் படித்த மாணவன்.

இடையர் எல்லாரும் ஜெயதாஸ் வீட்டில் கூடிப் புறப்பட ஆயத்தம் செய்தனர். அந் நேரம் தன் காற்றாடிகளை விற்கும்படி வந்த தாத்தா ஒரு துக்கமான செய்தி சொன்னார். அதாவது, ஆடுகளைக் காவல் செய்யும்படி அனுப்பப் பட்ட ராஜாராம் என்னும் கிழவன் மோட்டார் விபத்துக்காளாகி வைத்திய சாலைக்குக் கொண்டு போகப்பட்டனன் என்பதே.

"தலையாரி ஆடுகளைக் காவல் காக்கும்படி போனானே" என்று ஜெயதாஸ் கூறினன். எல்லோரும் அவ்வாறே கூறினர்.

"இன்றிரவு ஆடுகளுக்குக் காவல்யார்? நல்ல காவல் இருந்துமே ஆடுகள் சிறுத்தைப் புலிக்கிரையாகின்றன. யாராவது இன்றிரவு போக வேண்டும்" என்று ஜெயதாஸ் கூறின போது,

"அது என் வேலையல்ல" என்று பிரபாகரன் சொன்னான்.

"என் வேலையுமல்ல" என்று ஒவ்வொருவரும் பேசினர்.

"ராஜாராமுக்குப் பதில் நம்மில் யாராகிலும் ஒருவர் போக வேண்டுமென தலையாரி இங்கிருந்தால் எதிர்பார்ப்பா ரல்லவா?" என்று ஜெயதாஸ் கேட்டதற்கு, "அவர்தான் இல்லையே, அந்த வேலையும் எனக் குரியதல்ல" என்று ஒருவன் கூறினன். ஜெயதாசுக்கு மிகவும் வருத்த முண்டானது. நாடகத்துக்குச் செய்ய வேண்டிய ஒழுங்குகளனைத்தையும் செய்து முடித்து அவரவர் ஆடை யாபரணங்களையும் பிரித்துக் கொடுத்து அனுப்பி விட்டனன். பிறகு அவன் தன் வீட்டைப் பூட்டித் தாத்தாவைப் பார்த்து,

"தாத்தா நாடகத்துக்கா போகின்றீர்கள்?", என்று கேட்டதற்குத் தாத்தா தான் தவறாமல் போவதாகக் கூறினர்.

"அப்படியானால் இந்தப் புஸ்தகத்தை பிரபாகரனிடம் கொடுத்து நான் தலையாரியின் ஆடுகளைக் காவல் காக்கப் போகின்றபடியால் பிரபாகரனை நடிப்பவர்கள் மறந்து போன வார்த்தைகளை இப் புஸ்தகத்தில் பார்த்து உதவி செய்யும்படி சொல்லுங்கள்" என்று ஜெயதாஸ் தாத்தாவைக் கேட்டுக் கொண்டனன்.

தாத்தா எவ்வளவாய் ஜெயதாஸ் நாடகத்துக்கு வர வேண்டும் என்று வேண்டிக் கொண்டபோதிலும் ஜெயதாசுக்குத் தன் கடமை செய்வது விசேஷமாக இருந்தது.

நாடகம் நன்றாய் நடைபெற்றது. எவரும் புகழ்ந்து பேசினர். அது முடிந்த பின் தலையாரி அதில் பங்கெடுத்தவர்களுக்குப் பரிசு அளித்தனர். ஆளொன்றுக்கு ரூபாய் ஐந்து கிடைத்தது.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த தாத்தா தலையாரிடம் வந்து நின்றனர்.

"தாத்தாவுக்கும் பரிசு வேண்டுமா?" என்று தலையாரி கேலி பண்ணி சிரித்தனர்.

அதற்குத் தாத்தா "அப்படியல்ல, ஜெயதாஸ் இக் கதையை நன்றாய் எழுதிப் பயிற்சி கொடுத்தவன் என்று சொல்ல வந்தேன்" என்றனர்.

"ஏன் அவன் இங்கு வரக்கூடாது?" என்று தலையாரி கேட்டனர்.

"உங்கள் ஆடுகளைக் காவல் காக்கும்படி அங்கு சென்றிருக்கின்றான்" என்று தாத்தா கூறினர்.

"ஏன் வேறே ஒழுங்கு செய்து விட்டு வரக் கூடாது" என்று தலையாரி மறுபடியும் கேட்டனர்.

"இன்றிரவு காவல் காப்பது அவன் வேலையல்ல" என்று சொல்லித் தாத்தா நடந்த காரிய மனைத்தையும் எடுத்துரைத்தனர். அதோடு ஜெயதாசுக்குப் பரிசு அளிப்ப தவசியம் என்று பரிந்து பேசினர்.

தலையாரி இன்னும் அநேக கேள்விகளைக் கேட்டு திருப்தியடைந்த பின் பத்து ரூபாய் நோட்டு ஒன்றெடுத்துத் தாத்தா கையில் கொடுத்து "இதை ஜெயதாசுக்குக் கொடுங்கள். நாளைக்கு அவன் என்னை வந்து பார்க்கட்டும். அவனுக்கு உயர் பதவி அளிப்பேன். ஏனெனில் அவனைப் போல சிற்றின்பத்தினும் கடமையே சிறந்தது' என்றெண்ணும் வாலிபர் தேவை" என்று தலையாரி கூறினர்.

## EMBROIDERY PATTERNS



6 சித்திரப்பூத்தையல் வேலை மாதிரிகள்

# தாராகணம்




1. சிறியக் கைப்பிடிப் போகணி
2. பெரிய கைப்பிடிப் போகணி
3. பாம்பு
4. கேபியஸ்
5 காசியோப்பியா
6. காமிலஸ்
7. பெர்சியூஸ்
8. ஆரிகா
9. டாரஸ்
10. அறுமீன்
11. ஓரியன் (ஒரு பாகம்)
12. கேட்டஸ்
13. பிஸ்கஸ்
14. ஆரியஸ்
15. திரிகோணம்
16. அன்ட்ரோமெடா
17. பெகாசஸ்
18. ஈக்கூலியாஸ்
19. டெல்பீனஸ்
20. சிக்னஸ்
21. வாத்தியக் க்ருவி
22 ஆக்கில்லா
23. ஒபியூக்கஸ்
24. ஹெர்க்யூலிஸ்
25. சர்ப்பம்
26. மகுடம்
27. பாதரட்சை
28. காமா பெர்னீசஸ்
29. கன்னி (ஒரு பாகம்)
30. சிம்மம்
31. சிறு சிம்மம்
32. லிங்ஸ்
33. கான்சர்
34. ஜெம்மினி
35 சிறு கானிஸ்.

# நசரேயனாகிய இயேசு

J. J. Duerksen.

அகஸ்து இராயன் காலத்தில் ரோமை இராஜ்ஜியமெங்கும் வரி விதிப்பதற்குதவியாகக் குடியதிப்புக் கணக்கு எடுக்கப்பட்டது. இக் கணக்குப் பதிவு செய்யும்படி ஒவ்வொருவரும் தன் தன் ஊருக்குப் போகவேண்டியதாயிற்று.

நாசரேத்தூரிலிருந்த தச்சன் யோசேப்பும் தன் மனைவி மரியாளுடனே தாவீதின் ஊராகிய பெத்லெகேமுக்குப் போயினன். ஏனெனில் அவர்களிருவரும் தாவீதின் வம்சத்தில் உதித்தவர்கள்.

அவர்கள் அவ்வூருக்கு வந்தபோது சத்திரத்தில் தங்க இடமில்லை என்று கேள்விப்பட்டுத் திகைத்தனர். திரள் கூட்டம் இருந்த போதினும் அம் மக்கள் பட்சங் காட்டினபடியால் இவர்களுக்குக் கொஞ்சம் இடங் கிடைத்தது. ஆடு மாடுகளைக் கட்டிவைக்கும் இடத்தைப்



மரியாளும் மகனும்.

பெருக்கி, சுத்தம் செய்து, ஆடுமாடுகளை அப்புறப்படுத்தி, வைக்கோல் புல் முதலியன விரித்து இவர்கள் இளைப்பாறும்படி செய்தனர். அன்றிரவே இயேசு பாப்பா பிறந்து முன்னணையில் கிடத்தப் பட்டது.

வெளியில் தங்கள் மந்தையை மேய்த்துக் கொண்டிருந்த சில இடையர் ஒரு திருக்காட்சி கண்டனர். மிகுந்த பிரகாசத்துடன் ஓர் ஒளி வீசிற்று - ஒரு தூதன் தோன்றினன். இடையர் இதைக்கண்டு பயந்தனர். முகங்குப்புற விழுந்தனர். அத்தூதன் அவர்களை நோக்கி,

"பயப்படாதீர். நற்செய்தி கேளீர். இன்றிரவு பெத்லெகேம் என்னும் ஊரில் மேசியாவாகிய மீட்பர் பிறந்திருக்கின்றார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையில் கிடத்தியிருக்கக் காண்பீர் இதுவே அடையாளம்" என்று கூறினன். அந்நேரம் விண்ணோரின் கீதம் கிளம்பிற்று. அது "விண்ணில் தேவனுக்கு மகிமை, மண்ணில் சமாதானம் மக்களுக்குள் பிரியம்" எனக் கூறிற்று.

தூதன் மறைந்தனன். இடையர் எழுந்து மேசியாவைக் காண விரைந்து சென்றனர். அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட படியே இருக்கக் கண்டனர். அப்பாலகனுக்கு முன் விழுந்து பணிந்தனர். அதற்குப் பின்பு கடவுளைத் துதித்துக்கொண்டு எழுந்து சென்று இச்செய்தியை எங்குங் கூறியறிவித்தனர்.

குழந்தை பிறந்த எட்டாம் நாள், தூதன் உரைத்தபடியே இயேசு என்று பெயரிட்டனர்.

சிலநாட் சென்ற பின்பு கடவுளுக்கென்று பிரதிஷ்டை செய்யப் பிள்ளையை பெற்றோர் எருசலேம் தேவாலயத்துக்குக் கொண்டு போயினர்.

மேசியாவைக் காணுமுன் மரிப்பதில்லை என்று பரிசுத்த ஆவியினால் சிமியோனுக்கு முன்னறிவிக்கப் பட்டிருந்தது. யோசேப்பும்

மரியாளும் இயேசுவைக் கொண்டுவந்தபோது அந்த சிமியோன் அங்கிருந்தனன். கடவுள் அக்குழந்தை மேசியா எனக் காண்பித்தனர். ஆகையால் சிமியோன் இயேசுவைக் கையில் ஏந்தி கடவுளைத் துதித்து ஆசிர்மொழி கூறிப் பாடினதாவது "இப்பொழுது உமது அடியானைச் சமாதானத்தோடே போகவிடுகிறீர். ஏனெனில் உமது இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது."

அன்னாள் என்னும் தீர்க்கதரிசினியும் அங்கிருந்தனள். அவள் தன் காலமெல்லாம் ஜெபத்திலும் உபவாசத்திலும் நிலைத்திருந்தவள். அன்னையின் கரத்தில் அப் பாலனைக் கண்டவுடன் அவளும் கடவுளைத் துதித்து ஆசிர்மொழி கூறினள். மேசியாவைக் காண விரும்பினோரனைவரிடமும் அக் குழந்தையைக் குறித்துப் பேசினள். மரியாளோ இவைகளனைத்தையும் தன் இருதயத்திலே அடக்கி வைத்தனள்.

அதன் பின்பு மரியாளும் யோசேப்பும் இயேசுவை எடுத்துக் கொண்டு நாசரேத் தூருக்குப் போயினர். அங்கே பிள்ளை வளர்ந்து ஆவியிலே பலங்கொண்டது. ஞானமும் தெய்வகிருபையும் அப்பிள்ளையோடிருந்தது.

பாலிய பிராயத்தைப்பற்றி அதிகம் தெரியாது. ஆனால் அவர் பிற்கால ஜீவியத்திலிருந்து அமைதியான, பட்சமுள்ள உத்தம பையனாயிருந்திருக்க வேண்டும் என நிதானிக்கலாம். பிறர்க்குதவி செய்வதே அப்பையனின் விசேஷித்த நோக்கம் என்பதும் தெளிவாகின்றது.

பன்னிரண்டு வயதில் தன் பெற்றோருடன் அவர் எருசலேம் தேவாலயத்துக்குப் போனார். பாலிய பருவங்கடந்து ஓர் ஆளாகிவிட்டார் என்பது யூதர் பிரமாணம். அப்பயணம் அவருக்கு அதிகப் பிரியமாயிருந்திருக்க வேண்டும். எருசலேமின் காட்சிகள் அவர் கண்ணைக் கவர்ந்தது. வீட்டிற்குத் திரும்பும் சமயம் இவர் இனத்தார் ஜனத்தாரோடிருப்பார் என்று எண்ணிய பெற்றோர் ஒரு நாட்பிரயாணம் செய்த பிறகு இவரைத் தேட ஆரம்பித்தனர். அவரைக் காணோம். மறுபடியும் எருசலேமுக்கு போய்த் தேடினர். அங்குமிங்கும் தேடிக் கடைசியில் ஆலயத்தில் பெரிய சாஸ்திரிகள் மத்தியில் உட்கார்ந்து அவர்கள் கேள்விகளுக்கு உத்தரவு கொடுத்துக்கொண்டும் பதில் கேள்விகள் கேட்டுக்கொண்டும் இருக்கக் கண்டனர்.



எகிப்திலிருந்து ஏரோதுவின் மரணத்துக்குப் பின் இயேசுவை நாசரேத் தூருக்குத் திரும்பப் பெற்றோர் கொண்டு போயினர்.

"மகனே ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? எருசலேம் எங்கும் நாங்கள் உன்னைத் தேடினோமே!" என்று மரியாள் சொன்னதற்கு இயேசு தாயை நோக்கி, "ஏன் அங்கும் இங்கும் தேடினீர்கள்? இங்கு வரக்கூடாதா? என் பிதாவின் காரியமாய் இருப்பேன் என்று உங்களுக்குத் தெரியாமற் போனதென்ன?" என்று கேட்டனர். அப்போது அவர்களுக்கு அது விளங்கவில்லை. தாயாரோ அவர் சொன்னவற்றை உள்ளத்தில் பதித்துவைத்தனள்.

பெற்றோருடன் இயேசு நாசரேத்தூருக்குச் சென்றனர். அவர்கள் சொல்லுக்கடங்கி நடந்தனர். பதினெட்டு வருஷம் அங்கிருந்தனர். அக்காலத்தில் நடந்தவை நமக்குத் தெரியாது. ஆனால் சரீர, மனோ, ஆத்மவிருத்தி யிருந்தது எனத்தெரியும். அதோடு மனுஷர் தயவிலும் தெய்வ கிருபையிலும் அவர் மென்மேலும் விருத்தியடைந்தனர்.

# கெனில் வோர்த்

## (Sir Walter Scott)

### VII பாகம்.

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

விவேகமாய் வேலண்ட் விசாரித்ததில், டிரசில்லியன் சஸ்ஸெக்ஸ் பிரபுவுடன் அரசியைக் கெனில்வோர்த்துக்கு அழைத்து வர வார்விக்குச் சென்றிருப்பதாக அறிந்து பெரிய வாசலண்டை வேலண்ட் காத்திருந்தனன். டிரசில்லியனோ அவ்வழியாய் வராமல் அரசி வரவுக்கு முன்னதாகவே சிறிய வாசல் வழியாய் உட்பிரவேசித்துத் தன் அறையிற் சென்று அரசி வருமளவும் காத்திருக்கும்படி யோசித்திருந்தனன். அறைக்குள் நுழைந்தபோது ஆமியைக் கண்டு ஆவேசமென்று எண்ணினன். ஆமிக்கும் அங்கு அவனைக் கண்டது ஆச்சரியத்தை விளைவித்தது.

தன்னிடம் உதவி நாடி ஆமி வந்திருக்கலாம் என்று டிரசில்லியன் எதிர் பார்த்தனன். ஆனால் அவளோ தேசச் சட்டத்தின்படியும் அன்பின் பிரமாணத்தின்படியும், தன்னைப் பாதுகாக்கக் கடமைப் பட்ட ஒருவனருகே தானிருப்பதாகக் கூறினள்.

''அப்படியானால் நீ வர்ர்னியின் மனைவியோ?' என டிரசில்லியன் வினவினன்.

''வார்னியின் மனைவியா? எவ்வாறு நீ — ஆகிய என்னை இவ்வாறு பேசத் துணிந்தனை?'' என்று நிதானமாய்ப் பேசினள் ஆமி. தன் கணவன் தங்கள் விவாகத்தைக் குறித்து ஒருவருக்கும் சொல்லக் கூடாது என்றும் தன் வாழ்வு குறையும் என்றும் கூறியிருந்த படியால் அவள் தான் லீஸ்ட்டர் பிரபுவின் மனைவி என்பதை வெளிப் படுத்தவில்லை, அவருக்கு அளித்த மௌன வாக்கை நிறை வேற்றினள். கண்களில் கண்ணீர் ததும்பின.

''ஆமி, உன் கண்கள் உன் நாவின் வார்த்தைகளை மறுத்துக் கூறுகின்றனவே. உனக்கு உதவி தேவை, அது உனக்குக் கிடைக்கும். உன் தந்தையின் நிமித்தம் அரசி வாசலண்டை வரும்போதே உன்னைக் காணுமாறு உதவி செய்வேன். கெனில் வோர்த்தில் அவள் செய்யும் முதல் வேலை நீதியின் கிரியையாயிருப்பதாக!'' என்று டிரசில்லியன் சொன்னதற்குப் பதிலாக, அப் பெருமாட்டி மூர்க்கமாய்ச் சொன்னதாவது:-

''அப்படிச் செய்யலாகாது, செய்தால் எனக்குப் பெருந் தீங்குண்டாகும்'' என்பதே. டிரசில்லியன் அவள் மன நிலைமையை அறிந்து 24 மணி நேரமட்டும் தான் அவள் விஷயத்தில் பிரவேசிப்பதில்லை என்று வாக்களிந்தனன்.

பின்பு அவன் அவ்வறையை விட்டு வெளி முற்றத்திற்குப் போயினன். இவளுக்கு இவ்வளவு நேரங் கொடுத்தது சரியோ, வார்னி இவளைத் தன் மனைவியாக்கிக் குடும்ப சமாதானத்தைக் குலைப்பது சரியோ என யோசிக்கலாயினன். கெனில்வோர்த்தில் இருக்குமட்டும் அவளுக்கு யாதொரு தீங்கும் நேரிடாது என்று சொல்லித் தன்னைத் தேற்றிக் கொண்டனன். இம் மனையும் அரண்மனையும் இச்சமயம் ஒரு மனை தான் என்றெண்ணினன்.

அந் நேரம் வேலண்ட் அவனைக் கண்டு நடந்தவையனைத்தையும் அவனுக் கறிவித்தனன். தன் காரியம் டிரசில்லியனுக்குத் தெரியக் கூடாது என்று ஆமி சொன்னதாகவும் அதோடு லீஸ்ட்டர் பிரபுவுக்குத் தன்னைக்

காப்பதற்காக ஒரு கடிதம் அவள் அனுப்பி யிருக்கிறதாகவும் கூறினன். அக் கடிதத்தைக் காட்டும்படி எடுக்கத் தேடின போதோ அதைக் காணோம். மிகவும் கலங்கினன். தன் அறையில் இருக்கலாம் என்று சொல்லி அதை எடுத்துக் கொண்டு வரப் போவது போல் அவ்விடம் விட்டேகினன்.

அக் கடிதம் காணமற் போனது உண்மையே! கேடான ஆட்கள் கையிற் கிடைத்தால் அக் கடிதத்தைத் துர் பிரயோகம் செய்து தனக்கு ஆபத்துண்டாக்கு வார்களெனப் பயந்தனன். இவ் விஷயத்தில் டிரசில்லியன் தன்னைக் கடிந்து கொண்டதைப் பற்றியும் மனம் நொந்திருந்தனன். உயிரையும் பெரிதெனக் கருதாது உழைத்து அவனுக்கு உதவி செய்தும் தன் அருமை அறியாமல் தன்னை நடத்தின மாதிரி தனக்குத் திருப்தி யில்லை யாதலால், நடந்தவற்றை ஆமிக் குரைத்து விட்டு அவ் விடத்தை விட்டகல தீர்மானித்தனன்.

அவன் போகும் வழியில் மைக்கலைக் கண்டனன். தான் நடிகர்களில் ஒருவனென்றும் டிரசில்லியன் அறையிலிருக்கும் தன் தங்கையைக் காணச் செல்வதாகவும் வேலன்ட் கூறினன்.

இச் செய்தி டிரசில்லியனுக்கு விரோதமாகக் கதை கட்டுவதற்கு மைக்கலுக்கு இடங் கொடுத்தது. அவன் பேரைக் கெடுக்கும் இத் துர்ச் செய்தி வார்னிக்குக் கிடைத்த ஒரு நற் செய்தியாயிற்று. ஆகையால் மைக்கலும் அவனோடிருந்த காவற்காரனும் ஆமியைப் பார்க்க விடாமல் வேலன்டை வெளியேற்றினர். திரும்பி வந்தால் மரண தண்டனை கிடைக்குமென்று அவனை பயமுறுத்தி யனுப்பினர்.

இதற்கு இடையில் டிரசில்லியன் பிளென்டையும் ரலேயையும் சந்தித்து அவர்களுடன் தங்க இடங் கேட்டனன். ஏதோ தவறுதலாகத் தன் அறையில் வேறு ஆளிருப்பதாகவும் தன் சாமான்கள் தற்சமயம் அங்கு கிடப்பதாகவுங் கூறினன்.

அக்கினேரத்தில் இருள் மூடின பின் அரசி தன் பரிவாரங்களுடன் அங்கு வந்தடைந்தனள். நல்வரவு பத்திரம் வாசிக்கப் பட்ட பின் சபா மண்டபத்தில் வந்தமர்ந்தனள் அரசி. அரச சிம்மாசனம் அங்கமைக்கப் பட்டிருந்தது. அதுவே கொலுமண்டப மாயிற்று. பக்கத்தில் அரசியும் அவளது தோழியரும் தங்கு மறைகளிரு பக்கங்களிலும் இருந்தன.

அரசியை சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கக் கூறி லீஸ்டர் பிரபு முழங்காலூன்றி அரசியின் கரத்தை முத்தமிட்டு, தன்னிடம் வந்து தன்னை கௌரவப் படுத்தியதற்காக நன்றி கூறினன். பின்பு தானும் தன் பரிவாரங்களும் உடைமாற்றிக் கொண்டு திரும்பி வர அனுமதி பெற்றகன்றனன். மற்றவர்கள் அங்கு தூரத்தில் அமர்ந்திருந்தனர்.

அரசி ரலேயைக் கண்டு சைகை காட்டித் தன்னிடம் அழைத்தனள். ஏனெனில் அங்கிருந்தவர்கள் யாரென்று தனக்குத் தெரியாத படியால் அவன் உதவி தேவையாயிருந்தது.

டிரசில்லியன் உடை கேவலமாயிருந்த படியால் அரசி அவன் யாரென்று விசாரித்தனள். அப்போது அவளுக்கு ஆமியைப் பற்றிய ஞாபகம் வந்தது. வார்னியைப் பார்க்கவும் அரசி விரும்பினள். வார்னியின் உடை யலங்காரம் அரசி மெச்சத் தக்கதாயிருந்தது. உடனே "ஆமி வார்னியின் பேரில் பிரீதி கொண்டிருப்பது ஆச்சரிய மல்ல" எனக் கூறினள்.

ரலே பதிலுரைப்பதற்குள்ளாக லீஸ்டர் பிரபுவும் அவன் ஆட்களும் அங்கு வந்தனர்.

வெள்ளிச் சரிகை போட்ட வெள்ளை ஆடை தரித்துப் பிரபு வந்திருந்தனர்.

"அரச நீதிக்குரிய கிரியை நடப்பிக்க வேண்டும். வார்னிக்கும் டிரசில்லியனுக்கும் உள்ள ஒரு வருத்தம் விசாரிக்கப் படவேண்டும். அந்தப் பெண்மணி எங்கே?" என்று அரசி ஆரம்பித்தனள்.

லீஸ்ட்டர் பிரபுவுக்கு திகைப் புண்டாயிற்று. "அரசியே! அவள் வரவில்லையே!" என்றனர் பிரபு.

வார்னி "ஆமி பிரயாணம் பண்ணக் கூடாதபடி வியாதியா யிருக்கின்றனள் - அந்தோனி பாஸ்ட்ட ரிடமும் அலாஸ்கோ வைத்திய ரிடமும் அதற்கு உறுதி மொழிச் சீட்டு வாங்கிக் கொண்டு வந்திருக்கின்றேன். இதோ, பாருங்கள்" என்று சொல்லி எடுத்துக் காட்டினன்.

அரசி அதைப் பார்த்தும் பார்க்காமல் டிரசில்லியனை அழைத்து, அநுதாபங் காட்டி அச் சீட்டுகளை வாசித்துப் பார்க்கக் கேட்டனள்.

"மாட்சிமை தங்கிய அரசி மன்னிக்க வேண்டும் - அச் சீட்டுகள் உண்மை யல்ல" என்று கூறினன் - ஆமிக்குக் கொடுத்த வாக்கை மறந்தனன்.

"அதெப்படி? லிஸ்ட்டர் பிரபுவின் உண்மைக்கே பங்கம் உண்டாக்குகின்றனையே! பரவா யில்லை. உன்னை விசாரிப்போம்- அச் சீட்டுகளை வாசித்துப்பார். அதில் கூறியது உண்மையோ, அல்லவோ? அல்லவென்றால் அதற்கு ஆதாரம் என்ன?" என அரசி வினவினள்.

அரசி கேட்டபோது ஆமிக்குத் தான் கொடுத்த வாக்கு டிரசில்லியனுக்கு ஞாபகம் வந்தது. அவன் என்ன சொல்வ தென்றறியாமல் அச் சீட்டுகளைத் திரும்பத் திரும்ப வாசித்துப் பார்த்தனன். தனக்கு விளங்காததுபோல் அவன் பாவனை பண்ணினபோது, அரசி அவனைப் பார்த்து.

"நீ பெரிய சாஸ்திரியன்றோ? இச் சீட்டுகளை வாசித்து அறிய முடியாதா? என்ன சொல்லுகின்றாய்? அவைகளில் கண்டிருக்குங் காரியம் உண்மையோ, அல்லவோ?" என மறுபடியுங் கேட்டனள்.

அதைக் குறித்து ஆழ்ந்து யோசித்துத் தனக்குப் பிறகு கேடுண்டாகாதபடி "அச் சீட்டுகளைக் கொண்டு வந்தவர்களே உண்மையை ருசுப்படுத்தக்கூடியவர்கள்" என்று பட்டும் படாமலும் டிரசில்லியன் கூறினன்.

அந்த உத்தரவு அரசிக்குத் திருப்தியில்லை. நியாயமும் செய்யப்படவேண்டும். ஆகையால் வார்னி பேசும்படி அரசி எதிர் பார்த்தனள்.

வார்னி ஆக்ஸ்போர்ட் பிரபுவை அழைத்தனுப்பினன். அவருக்கு அந்தோனி பாஸ்ட்ட ரிடம் கொடுக்கல் வாங்கல் இருந்தபடியால் அவன் கையெழுத்துத்தான் என்று உறுதி மொழி கூறக் கேட்டனன். அலாஸ்க்கோ வைத்தியரைத் தெரியுமென்று மாஸ்ட்டர் பண்டிதர் கூறினர்.

"காரியம் தீர்ந்தது. டிரசில்லியன்! உன் கடமையைத் தைரியமாய் நிறை வேற்றினாய். உனக்காக வருத்தப்படுகின்றோம். உன் பெருமையையும் ஆடை அலங்கோலத்தையும் மனதார மன்னிக்கின்றோம்." என்று அரசி கூறினள்.

இவ்வளவு பொய் வார்த்தைகளையுங் கேட்டுச் சகிக்கக் கூடாதவனாய் ஓடி, முழங்கா லூன்றி அரசியின் ஆடையின் தொங்கலைப் பிடித்துக் கொண்டனள்.

"ஒரே ஒரு விண்ணப்ப முண்டு. இவ்வளவு அவசரமாய் முடிவு செய்ய வேண்

டாம். 24 மணி நேரம் எனக்குக் கிருபை யின் காலந் தரவேண்டும். அப்போது இச் சீட்டுகள் உண்மை யல்ல என்று ருசுப் படுத்துவேன்" என்று டிரசில்லியன் வேண் டினன்.

"என் வஸ்திரத் தொங்கலை விட்டு விடு" என்று அரசி கோபமாய்க் கூறி "இவனுக் குப் பைத்தியம் பிடித்திருக்கிறது - ரலே! இவனை அகற்று. காவல் செய்" என்றும் கூறினள்.

மறுபடியும் டிரசில்லியன் அரசியி னிடம் பேச ஆரம்பித்தனன். அதற்குள்ளாக ரலேயும் பிளௌன்டும் அவனை அப்புறப் படுத்தினர். ஆமியின் சுகவீனமே இவ னுடைய மனக்கிலேசத்துக்குக் காரணம் என்றும் சற்றுநேரம் இளைப்பாறினல் சரி யாய்ப்போகு மென்றும் அவர்கள் எண்ணி அவனை அறைக்குக் கொண்டு போய்ச் சேர்த் தனர்.

டிரசில்லியனுக்குப் பைத்தியம் என்று அரசி அநுமானித்தனள். குற்றத்துக்கு ஆதார மில்லை யென்று தள்ளி விட்டனள். வார்னிக்குப் பிரபுப் பட்டம் கொடுக்கப் போவதாகக் கூறினள். ஏனெனில் லீஸ்ட் டர் பிரபுவுக்குச் சந்தோஷ முண்டாகும் படிக்கும் ஆமியின் தந்தைக்கு இவ் விவாகத் தில் திருப்தி யுண்டாகும்படிக்கும் அப்படிச் செய்தனள்.

அரசி ஒரு பட்டயத்தை எடுத்து "ரிச் சர்ட் வார்னி! எதிரில் வருக - முழங்கா லூன்றுக"- என்றனள். தன் பட்டயத் தால் அவன் தோளில் தட்டிக் கொடுத்து "கடவுளின் நாமத்திலும் பரிசுத்த ஜியார்ஜ் நாமத்திலும் உமக்குப் பிரபு பட்டம் சூட்டு கின்றோம். உண்மையும், தைரியமும், அதிர்ஷ்டமும் உம்முடையவை யாகும் - சர் ரிச்சர்ட் வார்னி பிரபு எழுமின்!" வார்னி பிரபு எழுந்து தமக்குக் கிடைத்த கண்ணி யத்திற்காக அரசியைப் பணிந்து அகன்ற னர்.

அதன்பின் அரசி சஸ்ஸெக்ஸ் பிரபுவைப் பார்த்து யாருக்குப் பிரபுப் பட்டம் தான் சூட்டவேண்டுமெனக் கேட்டனள் "டிர சில்லியனே அதற் குறியவன். வீரன்- கல்வி மான் - எனினும் இப்போது அவனுக்குப் பதில் குதிரை வீரனுகிய நிக்கோலாஸ் பிளௌன்ட்டை நியமிப்பேன்" என்றுப் பிரபு கூறினர் - அரசிக்கு வால்ட்டர் ரலே யைப் பிரபு வாக்கப் பிரிய மென அறிந்த பெண்மணிகளில் ஒரு மாது ஓர் ஆளை நிய மிக்கும் உரிமை தங்களுக்கும்வேண்டும் என்று மன்றாட அரசி சம்மதித்தனள். அப்போது அம் மாது ரலேயின் பெயரைச் சொன்னாள்.

ஆக இரு நண்பரும் எதிரில் வந்து பணிந்து முழங்கா லூன்றி அரசியினல் பிரபுப்பட்டம் சூட்டப் பெற்றனர். லீஸ்ட் டர் பிரபுவுக்கு ஓர் ஆள் பிரபு பட்டம் பெற்ற னர். சஸ்ஸெக்ஸ் பிரபுவுக்கோ இரண்டு ஆட்கள் பிரபு பட்டம் பெற்றனர் - அதில் இவருக்கு பெருமை யுண்டாயிற்று.

(இன்னும் வரும்)

———(o)———

# விமானப் படையெடுப்பு முன் எச்சரிக்கைகள்.

(A. R. P.)

(1) விமானப் படையெடுப்பு அறிவிப்புச் சங்கு ஊதியவுடன் யாவரும் அருகிலுள்ள எந்த வீட்டிற்குள்ளாவது அல்லது அதற்காக வெட்டப்பட்டிருக்கும் அருகிலுள்ள எந்தக் குழிகளுக்காவது சீக்கிரத்தில் (இரண்டு அல்லது மூன்று நிமிஷங்களுக்குள்) போய்ச்சேர வேண்டும். எவ்விதமான வேலை செய்துகொண்டிருந்தாலும் அதைக் கண்டிப்பாய் நிறுத்திவிட வேண்டும். வீட்டிற்குள்ளிருப்பவர் வெளியே வரக்கூடாது.

(2) அம்மாதிரி சமயங்களில் துரதிருஷ்டவசமாக மைதானத்தில் இருக்கவேண்டி நேர்ந்தால் உடனே குப்புறப் படுத்துக்கொள்ள வேண்டும். கைகளால் காதுகளைப் பொத்திய மாதிரி தலையின் பின்புறத்தை மறைத்துக் கொள்ளவேண்டும். அப்படுக்கை நிலை தரை மட்டத்திலிருந்து ஒரு அடிக்கு மேற்பட்டதான (செங்குத்தான உயரம்) இருக்கக்கூடாது.

(3) வண்டி, மோட்டார் போன்ற வாகனங்களில் செல்பவர்கள், வண்டிகளிலிருந்து குதிரை, மாடு போன்றவைகளை அவிழ்த்துப் புறத்தே கட்டிவிட்டு மோட்டார், சைகிள் இவைகளைப் பூட்டாமல் பாதையின் இடது புறமாக ஒதுக்கி நிறுத்திவிட்டுப் பாதுகாப்புத் தேட அருகிலுள்ள எந்த வீட்டிற்குள்ளாவது, போய்ச் சேரவேண்டும்.

(4) விமானப் படையெடுப்பு அறிவிப்புச் சங்கு இரண்டு நிமிஷ நேரம் விட்டு விட்டு உயர்தும் தாழ்ந்தும் உள்ளதுமான சப்தத்தை ஏற்படுத்தும்.

(5) வீட்டில் நான்கு பக்கங்களிலும் சுவர்கள் உள்ள மத்திய அறையில் தங்குவது நல்லது. ஜன்னல்கள் கதவுகள் இவைகளுக்கு அருகில் உட்காருவது கூடாது. மெத்தை வீடானால் அடித்தளத்தில் இருத்தல் சிலாக்யம். ஜன்னல்களில் உள்ள கண்ணாடிகளை எடுத்து விடுவது மிகவும் நல்லது. கண்ணாடிகளுக்கு உட்புறத்தில் காகிதங்களை ஒட்டிவிடு. கண்ணாடி ஜன்னல்களை மூடி வைப்பதைவிட திறந்து வைப்பதே சிலாக்கியமானது.

(6) வீட்டில் எண்ணெய் விளக்குகள் இருந்தால் அவைகளை மிகவும் சிறியதாகச் செய்து கொள்ளவும். எலெக்ட்ரிக் போன்ற பிரகாசமான விளக்குகளை அணைத்துவிடவும். ஒருவிதமான வெளிச்சமும் வெளியே செல்லக் கூடாது. டார்ச் லைட்டுகள் தயாராக வைத்துக் கொள்வது நலம்.

(7) வீட்டில் தயாராக பக்கெட்டுகளில் மணலும் தண்ணீரும் வைத்துக்கொள்வது நலம்.

(8) மக்கள் மனத்தளர்ச்சியடையாமலும் பீதியடையாமலும் இருக்க வேண்டும்.

(9) வார்டன்கள் சொல்லும் குறிப்புகளை நன்ருக மனதில் பதிய வைத்துக்கொண்டு அதன்படி நடத்தல் வேண்டும்.

(10) எளிதில் தீப் பிடிக்கக்கூடிய பொருள்களை அதிகமாக அட்டம் போன்ற இடங்களில் வைக்காதிருத்தல் நலம்.

(11) குண்டுகள் வெடிக்காதிருந்தால் அதைப்பற்றி வார்டன்களுக்கு அறிவிக்க வேண்டும்.

(12) குண்டுகளுக்கு அருகில் செல்லாதே.

(13) படையெடுப்பு முடிந்தது, விமானங்கள் சென்று விட்டன என்னும் அறிவிப்புச் சங்கு ஒலித்த பிறகுதான் வெளியே வரவேண்டும். அதுவரை உள்ளேயே இருக்கவேண்டும். அப்படி படையெடுப்புக் காலத்தில் வருவது மிகவும் ஆபத்தானது.

(14) படையெடுப்பு முடிந்தது, விமானங்கள் சென்றுவிட்டன என்னும் அறிவிப்புச் சங்கு, ஒரு நீண்ட விடாது ஒலிக்கின்ற சத்தத்தைக் கொடுக்கும்.

Union High School Magazine
*Coimbatore.*

---

# தீண்டாமை வேண்டாமே!

K Muthulingam.

ஒரு நாள் அதிகாலையில் சிறு சிறு பையன்கள் விளையாடப் போயினர். அவர்கள் சராசரி வயது பத்து. பக்கத்துக் கிராமத்துக்குப் போய் மாமரங்களில் ஏறிப் பழம் பறித்துச் சாப்பிட்டனர். அவர்களுள் ஜோதி என்ற ஒரு சிறு பையனுக்கு மரமேற முடியாமல் கீழே தனியே நின்று கொண்டிருந்தனன். ஒரு பையனாவது அவனுக்குப் பழம் கொடுக்க வேண்டுமே என்று எண்ணவில்லை. அவர்கள் யாவரும் தன்னயமுடையோர்.

அந்நேரம் ஜோதி தன்னைச் சுற்றிப் பறந்து நின்ற பட்டுப்பூச்சிகளைப் பிடிக்கப் பிரயாசப் பட்டுக் கொண்டிருந்தனன். திடீரென ஒரு தென்னை மரத்தடியில் குரங்குக்குட்டி ஒன்று விளையாடிக் கொண்டிருந்தது. அவன் அதைக் கண்டு, கிட்டப்போய், அதனருகே உட்கார்ந்து, சிநேகிதங் காட்டித் தன் கையில் எடுத்துத் தடவிக்கொடுத்துக் கொண்டிருந்தனன். அதைக்கண்ட தாய்க் குரங்கு ஓடிவந்து பையனைப் பிறித் தன் குட்டியைப் பிடுங்கிப் பின்னும் அவனோடு சண்டை செய்தது.

ஜோதி அழுத சப்தங்கேட்டு ஒரு பெரிய கிராமப் பையன் ரவீ ஓடிவந்து அவனுக்கு உதவி செய்து தாய்க் குரங்கைப் பிடித்து அடித்துத் தூக்கி எறிந்தனன். பின்பு ரவீ ஜோதியின் காயங்களைக் கட்டித் தன் தோளின் மேல் போட்டுத் தூக்கிக் கொண்டுபோய் அவன் வீட்டில் சேர்த்தனன்.

என்ன நடந்தது, ஜோதியின் தந்தைக்கு இக்காட்சி மிகவும் கஷ்டமாயிருந்தது. எக்காட்சி? பையனுடைய காயங்களின் காட்சியல்ல. தன்னுடைய உயர்ந்த ஜாதிப் பையனை ஈன ஜாதிப் பையன் தொட்டுக் காயங்கட்டித் தூக்கிக்கொண் வந்த காட்சி தந்தையின் கோபத்தை கிளப்பிற்று - ஜோதிக்கு உதவி செய்த ரவீ உதை வாங்கினன். ஜோதியின் தந்தை அவனை வாயில் வந்தபடி திட்டி செருப்பால் அடித்து அனுப்பிவிட்டனன். ரவீயோ இதையெல்லாம் பொறுமையாய்ச் சகித்தனன். இது ஜோதிக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது.

காலம் சென்றது. எல்லாம் மறந்துபோனது. ஜோதி நன்றாய்ப் படித்துத் தேறி முன்னேறி வைத்திய சாஸ்திரியாயினர். ஒரு பெரிய வைத்திய சாலையில் உயர்பதவி பெற்றூழியம் செய்தனர். பெரிய சம்பளம் வாங்கினர். ஒரு நாள் ஜோதி காட்டின் வழியாய்ப் போகும் சமயம் காயப்பட்டுக்கிடந்த ஓர் ஆளைக் கண்டனர். ஈன ஜாதியார் அவனைச் சூழ நின்றனர் - ஜோதி தன் மோட்டார் வண்டியை நிறுத்திப் பார்த்த போது சிறு வயதில் தனக்குதவி செய்த ரவீயே காயப்பட்டுக் கிடப்பதாக அறிந்து அவன் கிட்டப்போய், அனுதாபங் காட்டி, காயங்கட்டித் தன் மோட்டார் வண்டியிலேற்றி வைத்திய சாலைக்குக் கொண்டுபோய்ப் பூரண சுகம் வரும் வரையில் சிகிட்சை செய்தனர். தன் தந்தையின் கடுஞ் சொற்கள் தன் ஞாபகத்திற்கு வந்தன. ஆகையால் தன்னாலியன்ற மட்டும் ரவீக்கு உதவிசெய்து சந்தோஷப் படுத்த ஜோதி விரும்பினர்.

ரவீ சுகமடைந்து தன் வீட்டிற்குப் போகும் சமயம் ஜோதியைப் பார்த்து,

"நான் செய்த உதவி மிகவும் சொற்பமானது. எனினும் அச்சமயம் எனக்குப் பதிலுபகாரம் கிடைக்கவில்லை. இச்சமயம் கிடைத்தது பெரிய பாக்கியம் - மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கின்றேன்." என்று கூறிப் போயினன்.

"மனுஷன் எதை விதைக்கிறானோ
அதையே அறுப்பான்"

# கம்பர் கவித்திறம்

வித்வான் K. வைத்தியலிங்கம் பிள்ளை

கம்ப நாடார் தன்னிகரில்லாத் தலைவனாகிய இராமபிரான் சரிதத்தைத் தமிழில் காவிய ரூபத்தில் வெளியிட்டுள்ளார். அவரது கவிகள் பிறபுலவர் தம் கவிகளைவிட பல துறைகளிலும் சீரியதாய் மிளிர்வன. இவர்தம் காவிய நயத்தை நோக்கி-நோக்கி மகிழாதவர்களும் இல்லை. அதனாலன்றோ, 'கம் நாடன் கவிதையிற்போற் கற்றோர்க்கிதயம் களிபாதே' என்று முன்னோர் புகழ்வாராயினர். இவரது கவி நடை திராக்ஷாபாகம், கதலி பாகம், நாளிகேர பாகம் என்னும் முத்திறத்து நடையும் இடத்துக்கேற்றவாறு நடந்தியல்வது. உருவகவுவமை முதலிய அணி நயங்களிலும் கம்பர் கவிதலை சிறந்து நிற்கும் உவமை முதலிய அணிகள் கூறுமிடத்தே வேறு பிற உலகியல் நிலையினையும், மாந்தர் திருந்த வேண்டிய நெறி முறையினையும் மறவாது தொட்டுச் செல்வது இவரது கவியில் அமைந்த சிறப்பியல்களில் ஒன்று.

இவ்வாறு வருமிடங்கள் பலவற்றில் ஒன்றை இங்குக் கவனிப்பாம். இராமவிலக்குமணர்கள் சீதாபிராட்டியைத் தேடிக்கொண்டு செல்லும் காட்டு வழியில் ஓர் நதியைக் காண்கின்றனர். அது கிட்கிந்தையில் உள்ள பம்பா நதியாம். [இது பல்லாரி ஜில்லாவிலுள்ளது. கிட்கிந்தையே தற்காலத்தில் ஹம்பி என வழங்கப் படுகின்றது என்பர்]. அது நதியே யாயினும் அந்த இடத்தில் தேங்கி நின்று ஓடுவதால் ஒரு பொய்கை போன்று தோன்றுவதாகக் கவி கூறுகிறார். 'அன்னதாகிய வகன் புனற் பொய்கையை யணுகி' (பம்பை நதிப் படலம்) என்பது அவர் கூற்று. வடமொழியிலும் இதனைப் பம்பாஸ்ரஸ் என்பர். இன்றும் நாட்டில் ஓடும் காவிரியை மேட்டூரில் காண்போர் இவ்வாறு கூறுவதன் பொருளைத் தெளிவுற அறிவர்.

இந்நதியைப் பற்றிக் கம்பர் கூறும் பாடல்கள் ஒவ்வொன்றும் மிக்கநயம் வாய்தவை. அவற்றில் ஒன்றுதான் இங்கு மேற்கொள்ளப் படுவது.

ஈர்ந்த நுண் பளிங் கெனத் தெளிந்த வீர்ம்புனல்
பேர்ந்தொழிற் நவமணி படர்ந்த பித்திகை
சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்ந்தவான்
ஓர்ந்துணர் வில்லவர் உள்ள மொப்பது.

[ஈர்ந்த - அறுத்த; நுண் - நேர்மையான; பளிங்கு - ஸ்படிகக்கல்; பித்திகை - கரை ஓர்ந்து - நூல்களை ஆராய்ந்தும்]

கண்ட பம்பையாறு மிகத் தெளிவான நீரையுடையது, அந்நீர் பளிங்கு போலக் காணப் படுவது. அவ்வாற்றின் இரு கரைகளிலும் இரத்தினக் குவியல்களாகிய நவமணித் திரள்கள் ஆங்காங்கு குவிந்து கிடக்கின்றன என்பது இதன் பொருள்.

பம்பைப் பொய்கையில் ஓடுகின்ற நீர் தெளிவுடையது, குளிர்ச்சியுடையது; என்பதை விளக்கத் "தெளிந்த ஈர்ம்புனல்" என்றார். தாம் கூறப்போவதை நிலை நாட்ட எடுத்துக் காட்டமைப்பாராய் "பளிங்கெனத் தெளிந்த ....புனல்" என்றார்.

தண்ணீரின் தெளிவுக்கு உவமை கூறவந்த மற்றொரு புலவரும் அது பளிங்கு போன்ற தெளிவுடையது என்பார் 'மணி மருள் தெண்ணீர்' (மணி பளிங்கு; மருள்-போன்ற) என்றார். அவ்வுவமையே கூற வந்த கம்பர் பொருள்களைக் கூர்ந் தறிந்த தமது மதிவன்மையால் பளிங்கினிடந் தெளிவுமட்டு மன்றி குளிர்ச்சியும் உடமை கண்டு இவ் விரண்டு தன்மையானும் தண்ணீருக்கு உவமை யாகுமென்று கூறுவாராய்ப் பளிங்கென.........புனல் என்றார்.

இங்குப் பளிங்கு நீரின் தெளிவுக்கும் உவமையாக வந்தது. அதிலும் தூய தெளிவும் மிக்க குளிர்ச்சியும் உடையது என்பதை விளக்கிக் காட்டுபவராய் 'குறித்தோன் கூற்றம் தெரிந்து மொழி கிளவி' (சொல்ல வேண்டிய தொன்றைக் கேட்போர் செவ்வன் உணருமாறு விளக்கிச் சொல்லுக) என்ற தொல்காப்

பியர் கருத்துக் கேற்ப 'ஈர்ந்த......பளிங்கு' என்றார். அறுக்கப்பட்ட பளிங்கின் அறுப்பு வாயின் பக்கம் இங்கு உவமை காட்டப்படு கிறது. [சாதாரண பளிங்குத் துண்டுக்கும் உடைந்த அல்லது அறுக்கப்பட்ட பளிங்கின் புறத்திற்கும் உள்ள வேறுபாட்டை யாவரும் அறிவர்] அறுக்கப்பட்ட பளிங்கின்புறமே அந்தத் தண்ணீருக்கு உவமை யாவது என்று கூறுவார் பளிங்கென வாளா கூறாது "ஈர்ந்த ..........பளிங்கென புனல் என்றார்.

மேலும் அறுக்கப்பட்ட அப்பளிங்கின் தெளிவிலும் மிக்க தெளிவுடையது அந் நீர் என்பார் ஈர்ந்த பளிங் கென்பதனோடு அமை யாது 'நுண் பளிங்கென.......புனல்" என்றார். பளிங்கு போல மிகத் தெளிந்தது ; அவ்வீர்ந்த பளிங்கினும் நுண் பளிஙகு போல மிகவும் தெளிந்தது அந் நீர் என்றார்.

எனவே பளிங்கு போன்றது; ஈர்ந்த பளிஙகு போன்றது-எனத் தன்னிலை, தாநிலை களிலும் தமநிலை (Superalative degree)யை ஏற்றிக் கூறுவாராய் "ஈர்ந்த நுண் பளிங்கெனத் தெளிந்த ஈரம் புனல் என்றார்.

இனி, பளிங்கிடம் முற்கூறிய தெளிவும் குளிர்ச்சியும் ஆகிய இயல்பை விட பிறிதொரு சிறப்பியல்பு முண்டு. அதாவது சார்ந்ததன் வண்ணமாய் நிற்றல்.

"யாதொன்று பற்றின் அதன் இயல்பாய் நின்று பந்தமுறும் பளிங்கு"—

என்ற ஓர் பெரியார் (தாயுமானவர் பாடலா னும்) இஃது அறியப்படும், பளிங்கு எவ்வெப் பொருள்களைச் சாறுகின்றதோ அவ்வப் பொருளின தன்மை யேதானும் கொண்டிருப் பது. இவ் வியல்பு தண்ணீரிடத்தும் உண்மை யை அனைவரும் அறிந்த தொன்று, "நிலத் தியல் பானீர் திரிந்தற்றாகும்" என்ற திருக் குறளும் வலியுறுத்தும். ஆகவே பளிங்கைத் தண்ணீருக்கு உவமை கூற வந்த கவிஞர் பெருமான் இவ் வியல்பையும் மறந்தாரலர். அதை அறியதோர் நீதியைப் புலப் படுத்த தற்குக் கையாளுகின்றார்.

பம்பை யாற்றின் இருகரைகளிலும் மாணிக்கம், முத்து, மரகதம், வைடூரியம், வைரம், பவளம், கோமேதகம், நீலம், புட்ப ராகம் என்னும் நவரத்தினங்களும் குவியல் களாகக் குவிந்து கிடக்கின்றன. பம்பை யாற்றின் தெளி நீ ரோட்டம் செல்லுங்கால் நவரத்தினங்களும் நிறைந்துள்ள கரைகளைச் சாருந் தோறும் அவ்வவ் விரத்தினங்களுக் குரிய நிறைத்தைத் தானும் ஏற்று ஓரிடத் தில் சிகப்பாகவும், ஓரிடத்தில், பச்சையாக வும், ஓரிடத்தில் மஞ்சள் நிறமாகவும், ஓ ரிடத்தில் நீல நிறமாகவும், ஓரிடத்தில் வெண்மையாகவும், இவ்வாறு காண்பார்க்கு மாறி மாறிக் காட்சி யளித்துச் செல்கின்றது. இங்ஙனம் காட்சி யளித்துச் செல்கின றமைக்கு உவமையாகக் கொண்டுள்ளார் அறிவிலிகளின உள்ளத்தை - பேதைகள் தமெக்கென ஓர் அறிவிலாராய் தாம் யார் யாருடன் கூடுகின்றனரோ அவர்களுடைய அறிவின் அளவாய்த் தம்மை வெளிப்படுத்தி அடிக்கடி மாறக்கூடிய தன்மை உடையவ ராவர். இதனைப் பொய்கை ஓரம் ஓடும் நீரின் தன்மையால் கவி விளக்கிச் செல்வது எத்தகைய தோர் பாராட்டற் குரியது

இனி இச் செய்யுளில் உய்த்துணர வைக் கப்பட்ட பொருள்யாது? நதியின் நடுவில் செல்லும் நீரோட்டம் சுற்றுப்புறங்களால் பாதிக்கப்படாது. தன்னியல்பு மாறுமல் செல்கின்றது எதைப்போலவெனின், பெரி யோர்கள் உலக வாழ்விலே ஈடுபட்டிருப் பினும் தனித்த குறிக்கோளுடையராய் கடைபோகுந்தனையும் தமது கொள்கை யைக் கொண்டுய்ப்பதைப் போல கம்பரின கவித்திறந்தான் என்னே! என்னே !!

வித்தியார்த்திகளான மாணவர்கள் தங்கள் ஆசிரியர் உதவியால் திருந்திய குறிக்கோளை மனத்துட் கொண்டு இடையிடையே ஏற் படும் சம்பவங்களினால் தம் கோட்பாட்டி னின்றும் பிறழாது வாழ்நாளை இனிது செலுத்தி வாழ்வார்களாக என்பது கருதியே இச்செய்யுள் இங்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

Union High School Magazine,
Coimbatore.

நாடு ஆவணக காப்பக
(o)



Registered No. M. 3804.



ஒரு பாடசாலை

Printed by S. T. Rhenius, at the N.M.S. Press, 48 c, Peters Road, Royapettah, Madras,
Edited by Rev. T. A. Fenn, London Mission Church, Coimbatore and
Published by M. Davamoni at Royapettah P.O., Madras.